தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

மனுக்கள் குழு

(2018 – 2020)

(பதினைந்தாவது பேரவை)

பன்னிரெண்டாவது அறிக்கை

மனுக்கள் குழுவின் (2012-2013) (பதினான்காவது பேரவை) 16-வது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகள் மீது சம்பந்தப்பட்ட துறைகளால் மேலும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்த அறிக்கை.

(பேரவைக்கு அளிக்கப்பெற்ற நாள் 09 JAN 2020)

சட்டமன்றப் பேரவைச் செயலகம்
சென்னை – 600 009.


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

மனுக்கள் குழு

(2018 – 2020)

(பதினைந்தாவது பேரவை)

பன்னிரெண்டாவது அறிக்கை

மனுக்கள் குழுவின் (2012-2013) (பதினான்காவது பேரவை) 16-வது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகள் மீது சம்பந்தப்பட்ட துறைகளால் மேலும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறிதத அறிக்கை.


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

பொருளடக்கம்

பக்கங்கள்

1. 2018–2020–ஆம் ஆண்டுகளுக்கான மனுக்கள் குழுவின் அமைப்பு - iii

2. அறிக்கை - v

3. இணைப்பு - I
குழுவினால் பரிந்துரை செய்யப்பட்ட தொடர விரும்பும் மனுக்களின் விவரங்கள் - 1 - 9

4. இணைப்பு - II
குழுவினால் பரிந்துரை செய்யப்பட்ட, துறையின் பதில் படித்து பதிவு செய்யப்பட்ட மனுக்களின் விவரங்கள் - 11 - 33

5. இணைப்பு - III
குழுவினால் பரிந்துரை செய்யப்பட்ட நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்பட்ட மனுக்களின் விவரங்கள் - 35 - 54

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

மனுக்கள் குழு

(2018-2020)

(பதினைந்தாவது பேரவை)

(**05.07.2018**-ஆம் நாளன்று அமைக்கப்பெற்று **31.03.2020** வரை நீட்டிக்கப்பட்டுள்ளது)

தலைவர்

திரு. சு. ராஜேந்திரன்,
அரசு தலைமைக் கொறடா

உறுப்பினர்கள்

திரு. க. அன்பழகன்

திரு. பா. ஆறுமுகம்

திரு. மு. சக்ரபாணி

திரு. துரை. சந்திரசேகரன்

திருமதி கு. சித்ரா

திரு. உ. தனியரசு

திரு. P. முருகன்

திரு. பி. மூர்த்தி

திரு. கே.எஸ். விஜயகுமார்

திரு. கோ. வெங்கடாஜலம்

செயலகம்

திரு. கி. சீனிவாசன்	:	செயலாளர்
திருமதி இரா. சாந்தி	:	இணைச் செயலாளர்
திருமதி வெ. சகுந்தலா	:	குழு அலுவலர் (துணைச் செயலாளர் நிலை)
திரு. மு. மோகன்ராஜா	:	சார்புச் செயலாளர்


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
மனுக்கள் குழு (2018–2020)
(பதினைந்தாவது பேரவை)
பன்னிரெண்டாவது அறிக்கை

அறிக்கை

2018–2020–ஆம் ஆண்டுகளுக்கான மனுக்கள் குழுவின் **பன்னிரெண்டாவது** அறிக்கையினை மனுக்கள் குழுவின் தலைவராகிய நான் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

குழுவின் கூட்டம்

2018–2020–ஆம் ஆண்டுகளுக்கான மனுக்கள் குழு **14.08.2019**-ஆம் நாளன்று அரியலூர் மாவட்டத்திலுள்ள மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் அமைந்துள்ள கூட்ட அரங்கில் கூடியது. அக்கூட்டத்தில் **04.09.2012**-ஆம் நாளன்று அரியலூர் மாவட்டத்தில் நடைபெற்ற மனுக்கள் குழு **(2012-2013) (பதினான்காவது பேரவை)** கூட்டத்தில் ஆய்வு செய்யப்பெற்று **08.02.2013**-ஆம் நாள் அன்று பேரவைக்கு அளிக்கப்பெற்ற **16**–வது அறிக்கையில் கண்டுள்ள **31** மனுக்கள் குறித்த குழுவின் பரிந்துரைகள் மீது சம்பந்தப்பட்ட துறைகளால் எடுக்கப்பட்ட மேல் நடவடிக்கைகள் குறித்த விவரங்களை குழு ஆய்வு செய்தது.

குழுவின் பரிந்துரைகள் குறித்து துறை அளித்துள்ள அறிக்கைகளின் அடிப்படையில் மறு ஆய்வு செய்யப்பட்ட **31** மனுக்களின் மீதான குழுவினால் பரிந்துரை செய்யப்பட்ட **7** மனுக்களின் மீதான பரிந்துரைகளின் மீது துறை மேலும் நடவடிக்கை எடுக்க குழு விரும்புகிறது. **11** மனுக்கள் மீதான பரிந்துரைகள் குறித்து துறைகள் அளித்த பதிலுரைகள் குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்டதால், அவை படித்துப் பதிவு செய்யப்பட்டனவாகக் கருதப்பட்டன. மீதமுள்ள **13** மனுக்கள் மீதான பரிந்துரைகள் துறையால் நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்பட்டன.

குழு பரிந்துரை வழங்கிய தொடர விரும்பும் மனுக்களின் விவரங்கள் இணைப்பு–I–இல் அளிக்கப்பட்டுள்ளன. குழுவினால் பரிந்துரை செய்யப்பட்டவற்றில் துறையின் பதில் குழுவினால் ஏற்கப்பட்டு படித்துப் பதிவு செய்யப்பட்ட மனுக்களின் விவரங்கள் இணைப்பு–II–இல் அளிக்கப்பட்டுள்ளன. குழுவினால் பரிந்துரை செய்யப்பட்ட நிறைவேற்றப்பெற்றதாகக் கருதப்பட்ட மனுக்களின் விவரங்கள் இணைப்பு–III–இல் அளிக்கப்பட்டுள்ளன.

07.01.2020–ஆம் நாளன்று சென்னையில் நடைபெற்ற கூட்டத்தில் இவ்வறிக்கைக்குக் குழு தனது ஒப்புதலை அளித்தது.

சென்னை – 600 009,
07.01.2020
விகாரி, மார்கழி திங்கள் 22–ஆம் நாள்,
திருவள்ளுவர் ஆண்டு – 2050.

சு. ராஜேந்திரன்,
தலைவர்,
மனுக்கள் குழு.


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்புகள்

இணைப்பு - I

குழுவினால் பரிந்துரை செய்யப்பட்ட, தொடர விரும்பும் மனுக்களின் விவரங்கள்

வரிசை எண் (1)	மனு எண் (2)	மனுதாரரின் பெயரும், முகவரியும் (3)	மனுவின் சுருக்கம் (4)	துறையின் பதிலுரை (5)	குழுவின் பரிந்துரை (6)	துறையின் இறுதியறிக்கை (7)
1	2737	திரு. பி. இரவிச்சந்திரன் (ஆசிரியர்), 3/87–பி.ராமலிங்க நகர், 5.–வது தெரு, அரியலூர்.	தார்ச் சாலை அமைத்தல் மற்றும் கழிவு நீர் வாய்க்கால் கோரியது.	மனுவின் மீது நடவடிக்கை மேற்கொண்டு ஊராட்சி ஒன்றிய பொது நிதியிலிருந்து மெட்டல் சாலை அமைத்திட மதிப்பீடு ரூ.2,00,000/– க்கு வேலை உத்திரவு 14.7.2012 அன்று வழங்கப்பட்டுள்ளது. மேலும் இப்பணி மேற்கொள்ளும் போது இருபுறமும் கழிவு நீர் வாய்க்கால் அமைத்து பணி மேற்கொள்ளப்படும். தற்சமயம் இப்பணி துவங்கிட ஆயத்த நிலையில் உள்ளது. (வட்டார வளர்ச்சி அலுவலர், (வ.உ) ஊராட்சி ஒன்றியம், அரியலூர் அவர்களின் கடித எண்.ந.க.ஆ.1/2017/2012, நாள்: 28.7.2012)	தார்ச் சாலை அமைக்கும் பணியினை விரைந்து முடித்து அதன் மீதான அறிக்கையினை குழுவிற்கு அனுப்பி வைக்க வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது.	மனுவின் மீது நடவடிக்கை மேற்கொண்டு ஊராட்சி ஒன்றிய பொது நிதியிலிருந்து மெட்டல் சாலை அமைத்திட மதிப்பீடு ரூ.2,00,00/– க்கு வேலை உத்தரவு 14.7.2012 அன்று வழங்கப்பட்டு பணி முடிக்கப்பட்டுள்ளது. ஒருங்கிணைக்கப்பட்ட ஒப்படைக்கப்பட்ட வருவாய் இனங்கள் திட்டத்தின்கீழ் 0/0–1/600 மீட்டர் ரூ.29.60 லட்சம் மதிப்பீட்டிற்கு வடிகால் வாய்க்காலுடன் கூடிய தார்ச் சாலை அமைக்கும் பணி தேர்வு செய்யப்பட்டுள்ளது.

(7)

மேலும், சட்டமன்ற உறுப்பினர் திட்டத்தின் கீழ் சட்டமன்ற உறுப்பினரிடமிருந்து ராமலிங்க நகர் தெற்கு பகுதியில் 200 மீட்டர் வடிகால் வாய்க்கால் கோரி மதிப்பீடு 5.00 லட்சம் சட்டமன்ற உறுப்பினர் நிதியில் செய்திட கோரப்பட்டுள்ளது.

(வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ), அரியலூர் – ந.க.எண்.அ4/382/2017, நாள் 31.07.2019)

(8)

எருத்துக்காரன்பட்டி ஊராட்சி, ராமலிங்க நகரில் வடிகால் வாய்க்காலுடன் கூடிய தார்ச் சாலை அமைக்கும் பணியினை வருவாய் இனங்கள் திட்டத்தின் கீழ் விரைந்து முடிந்திட குழு அரியலூர் ஊராட்சி ஒன்றிய, வட்டார வளர்ச்சி அலுவலருக்கு மீண்டும் பரிந்துரை செய்கிறது.

வரிசை எண் (1)	மனு எண் (2)	மனுதாரரின் பெயரும், முகவரியும் (3)	மனுவின் சுருக்கம் (4)
2	2742 மற்றும்	1. திரு. கோ. சிவசிதம்பரம், செயலாளர் ABCSCP 4/18, விசாலாட்சி நகர், ஜெயங்கொண்டசோழபுரம், அரியலூர் மாவட்டம்.	ஜெயங்கொண்டம் சோழபுரம் உரிமையியல் நீதிமன்றத்திற்கு சொந்த கட்டடம் கட்டித் தரக் கோரியது.
	2751	2. செயலாளர், அட்வகேட் அசோசியேஷன், 52, சன்னதித் தெரு, ஜெயங்கொண்டம்.	

துறையின் பதிலுரை

(5)

ஜெயங்கொண்டத்தில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம் கட்டுவதற்கு தோராய மதிப்பீடு அரசுக்கு சமர்ப்பிக்கப்பட்டு தற்போது 2012–13–ஆம் ஆண்டிற்கான விலை விகிதப்படி உள்ளது. மதிப்பீடுகள் 2012–13–ஆம் ஆண்டின் விலை விகிதப்படி தயார் செய்து அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. உரிய ஒப்புதல் அரசிடமிருந்து பெறப்பட்டதும் கீழ்க்கண்ட நீதிமன்றக் கட்டடங்கள் கட்டுவதற்கான உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

1) மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்
2) மாவட்ட குற்றவியல் நீதிமன்றம்
3) சிறப்பு சார்பு நீதிமன்றம்–1
4) சிறப்பு சார்பு நீதிமன்றம்–2

(செயற்பொறியாளர், பொதுப்பணித்துறை (கட்டடங்கள்) அரியலூர் அவர்களின் கடித எண்.11/2012/TY-II, நாள் 25.07.2012)

துறையின் இறுதியறிக்கை

(7)

அரசாணை எண்.1001/உள்துறை (Cts.111) துறை நாள் : 14.08.2018 (G.o.(Ms) No.1001/ (Cts.111) Department dated : 14.08.2018)-ன் படி அரியலூர் மாவட்டம் ஜெயங்கொண்டத்தில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடங்கள் கட்டுவதற்கான மதிப்பீடு ரூபாய் 1726.24 லட்சம் மற்றும் நீதிமன்ற வளாகத்தில் நீதிபதிகள் குடியிருப்பு கட்டடம் கட்டும் பணிக்கு மதிப்பீடு

குழுவின் பரிந்துரை

(6)

செயற்பொறியாளர், பொதுப்பணித் துறை (கட்டடங்கள்) அவர்கள் மேற்படி பணிகள் மீதான தொடர் நடவடிக்கை குறித்து குழுவிற்கு அறிக்கை அளிக்க வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண் (1)	மனு எண் (2)	மனுதாரரின் பெயரும், முகவரியும் (3)	மனுவின் சுருக்கம் (4)	துறையின் இறுதியறிக்கை தொடர்ச்சி..... (7)	குழுவின் குறிப்புரை (8)
3	2743	திரு. கே.எம். முத்துசாமி, கோரைக்குழி அஞ்சல், அரியலூர் மாவட்டம்.	கோரைக்குழியில் சமுதாய நலக் கூடம் கட்டித் தரக் கோருதல்.	ரூபாய் 361.68 லட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு 27.11.2018ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு ஒப்பந்தக்காரர் தேர்வுசெய்து 16.07.2019 அன்று உயர் நீதிமன்ற நீதிபதி அவர்களால் அடிக்கல் நாட்டு விழா செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. கட்டட (க&ப) கோட்டம், செயற்பொறியாளர் கடித எண்.கோ.108/2018/வ.2/ Court Petition, நாள் 29.07.2019)	ஜெயங்கொண்டம் சோழபுரம் உரிமையியல் நீதிமன்றத்திற்கு சொந்த கட்டடம் கட்டி பணிகள் முடிக்கப்பெற்றவுடன் இது குறித்த அறிக்கை ஒன்றினை குழுவிற்கு அளித்திட மாவட்ட ஆட்சித் தலைவரை குழு கேட்டுக் கொள்கிறது.

துறையின் பதிலுரை (5)	குழுவின் பிரிந்துரை (6)
சமுதாய நலக் கூடம் கட்டடம் கட்ட மதிப்பீடு, தயார் செய்யப்பட்டு பணிகள் மேற்கொள்ள நிதி ஒதுக்கீடு கோரி பாராளுமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு கோரி சிதம்பரம் பாராளுமன்ற உறுப்பினர் அவர்களுக்கு கருத்துரு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. (வட்டார வளர்ச்சி அலுவலர், தா.பழூர் அவர்களின் கடித ந.க.எண்.ஆ2/1837/2012, நாள் 27.07.2012)	பாராளுமன்ற உறுப்பினர் நிதியைப் பெற்று கோரைக்குழியில் விரைவில் சமுதாய நலக் கூடம் கட்டித் தரப்பட வேண்டும் என்றும் மேற்படி பணிகள் மீதான தொடர் நடவடிக்கை குறித்து குழுவிற்கு அறிக்கை அளிக்க வேண்டுமென்றும் குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் இறுதியறிக்கை	குழுவின் குறிப்புரை
(7)	(8)
தா. பழூர் ஊராட்சி ஒன்றியம், அணிக்குறிச்சி ஊராட்சிக்குட்பட்ட கோரைக்குழி கிராமத்தில் சமுதாய நலக்கூடம் கட்டுவதற்கு நிதி ஒதுக்கீடு கோரி சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. நிதி ஒதுக்கீடு வரப்பெற்றவுடன் சமுதாய நலக்கூடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (தா. பழூர் ஊராட்சி ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ) அவர்களின் 08.08.2019 ஆம் நாளிட்ட கடிதம்.)	மனுக்கள் குழுவின் (2018–2020) பத்தாவது அறிக்கையில் மீண்டும் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

வரிசை எண் (1)	மனு எண் (2)	மனுதாரரின் பெயரும், முகவரியும் (3)	மனுவின் சுருக்கம் (4)
4	2744	திரு. கே.எம். முத்துசாமி, கிளைச் செயலாளர், கோரைக்குழி கிளை, உல்லியக்குடி அஞ்சல், அரியலூர் மாவட்டம்.	கோரைக்குழியில் பல ஆண்டுகளாக வாடகைக் கட்டடத்தில் இயங்கிவரும் பகுதி நேர கூட்டுறவு அங்காடிக்கு புதிய கட்டடம் கட்டித் தரக் கோருதல்.

துறையின் பதிலுரை

(5)

புதிய பகுதி நேர அங்காடி கட்டடம் கட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, பணிகள் மேற்கொள்ள நிதி ஒதுக்கீடு கோரி அரியலூர் சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்கு கருத்துரு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.
(வட்டார வளர்ச்சி அலுவலர், தா.பழூர் அவர்களின் கடித ந.க.எண்.ஆ2/1837/2012, நாள்: 27/07/2012)

துறையின் இறுதியறிக்கை

(7)

தா. பழூர் ஊராட்சி ஒன்றியம், அணிக்குறிச்சி ஊராட்சிக்குட்பட்ட கோரைக்குழி கிராமத்தில் கூட்டுறவு அங்காடிக்கு புதிய கட்டடம் கட்டுவதற்கு நிதி ஒதுக்கீடு கோரி சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. நிதி ஒதுக்கீடு வரப்பெற்றவுடன் பகுதி நேர கூட்டுறவு அங்காடிக்கு புதிய கட்டடம் கட்டித்தரப்படும் என்பதை பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.
(தா. பழூர் ஊராட்சி ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ) அவர்களின் 08.08.2019 ஆம் நாளிட்ட கடிதம்.)

குழுவின் பரிந்துரை

(6)

2012–2013–ஆம் ஆண்டிற்கான சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து மேற்படி பணிக்கு நிதி ஒதுக்கித் தருவதாக அரியலூர் சட்டமன்ற உறுப்பினர் உறுதியளித்துள்ளதால் அந்நிதியைப் பெற்று கோரைக்குழி பகுதி நேர கூட்டுறவு அங்காடிக்கு புதிய கட்டடம் கட்டித் தந்து அது தொடர்பான அறிக்கையை குழுவிற்கு அனுப்பவேண்டுமென வட்டார வளர்ச்சி அலுவலர், தா.பழூர் அவர்களுக்குக் குழு பரிந்துரை செய்கிறது.

குழுவின் குறிப்புரை

(8)

மனுக்கள் குழுவின் (2018–2020) பத்தாவது அறிக்கையில் மீண்டும் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

வரிசை எண்	மனு எண்	மனுதாரரின் பெயரும், முகவரியும்	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
5	2748	ஊர் பொது மக்கள், வீரசோழபுரம், தழுதாழைமேடு, உடையார்பாளையம் வட்டம், அரியலூர் மாவட்டம்.	ஜெயங்கொண்டம்–குடந்தை – கங்கைகொண்டசோழபுரம்–அணைக்கரை வழியாக நகரப் பேருந்து இயக்கக் கோருதல்.

துறையின் பதிலுரை	குழுவின் பரிந்துரை
(5)	(6)
1) கோரிக்கை வழித்தடமான ஜெயங்கொண்டம்–கும்பகோணம் (வழி) கங்கை கொண்டசோழபுரம், அணைக்கரை தடநீளம் 45.0 கி.மீ. ஆகும். இது நகரப் பேருந்து இயக்கக் கூடிய அதிகபட்ச தூரமான 35.0 கி.மீட்டரை விட கூடுதலாக உள்ளதால் இத்தடத்தில் நகரப் பேருந்து இயக்க இயலாது. 2) ஜெயங்கொண்டத்திலிருந்து கங்கைகொண்ட சோழபுரம், அணைக்கரை வரை 26 நடைகள் நகர பேருந்தும், கும்பகோணத்திலிருந்து அணைக்கரைக்கு கும்பகோணம் கோட்ட நகரப் பேருந்துகள் மூலம் 54 நடைகள் இயக்கப்பட்டு வருகிறது. மேலும், ஜெயங்கொண்டத்திலிருந்து அணைக்கரை வழியாக கும்பகோணத்திற்கு 15 நிமிட இடைவெளியில் 1 புறநகர பேருந்து வீதம் இயக்கப்பட்டு வழித்தடம் நன்கு பேருந்து வசதி பெற்றுள்ளது. (பொது மேலாளர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், திருச்சி அவர்களின் கடித எண்.த.அ.போக/கும்ப /திருச்சி/5/திவ1/76–4/2012, நாள் 29.07.2012)	ஜெயங்கொண்டம் முதல் திருப்பனந்தாள் வரை ஐந்து நடைகளை ஒரு மாத காலத்திற்குள் இயக்க வேண்டுமென்று குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் இறுதியறிக்கை	குழுவின் குறிப்புரை
(7)	(8)
தஅபோக, திருச்சி மண்டல நகரப் பேருந்து தடம் எண்.012A–ன் மூலம் ஜெயங்கொண்டம் – திருப்பனந்தாள் (வழி) கங்கைகொண்ட சோழபுரம், அணைக்கரை வழியாக இயக்கப்பட்ட நகரப் பேருந்து அணைக்கரை பாலம் வேலை முடிவடைந்த பின்பு இயக்கம் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை அன்புடன் தெரிவித்துக் கொள்கிறோம். (தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம்) பொது மேலாளர் திருச்சி மண்டலம் – தஅபோக / கும்ப / திருச்சி / வ / திவ1 /11–2/2014, நாள் 01.08.2019.)	மனுக்கள் குழுவின் (2018–2020) பத்தாவது அறிக்கையில் மீண்டும் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

∞

வரிசை எண் (1)	மனு எண் (2)	மனுதாரரின் பெயரும், முகவரியும் (3)	மனுவின் சுருக்கம் (4)
6	2752	ஊர் பொதுமக்கள், வானத்திரையன்குப்பம், ஜெயங்கொண்டம் வட்டம், அரியலூர் மாவட்டம்.	ஜெயங்கொண்டத்திலிருந்து – ஆடுதுறைக்கு உட்கோட்டை வழியாக இயக்கப்பட்ட நகரப் பேருந்து (எண்.9) அதே வழித்தடத்தில் மீண்டும் இயக்கக் கோருதல்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPH

துறையின் பதிலுரை

(5)

மனுதாரர் கோரிய வழித்தடத்தில் நிறுத்தப்பட்ட பேருந்தை இன்னும் ஒரு மாதத்திற்குள் ஆறு நடைகள் இயக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

(பொது மேலாளர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், திருச்சி அவர்களின் கடித எண்.தஅபோக/கும்ப /திருச்சி/வ/திவ1/150–2/2012, நாள் 29.07.2012)

துறையின் இறுதியறிக்கை

(7)

தடம் எண் 009A நகரப் பேருந்து மூலம் ஜெயங்கொண்டம் – ஆடுதுறை (வழி) உட்கோட்டை, தழுதாழைமேடு வழித்தடத்தில் இயக்கப்பட்ட பேருந்து அணைக்கரை பாலம் வேலை முடிவடைந்த பின்பு இயக்கம் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை அன்புடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

(தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம்) பொது மேலாளர் திருச்சி – தஅபோக/கும்ப/திருச்சி /வ/திவ1/11–2/2014, நாள் 01.08.2019)

குழுவின் பரிந்துரை

(6)

மனுதாரர் கோரிய வழித்தடத்தில் நிறுத்தப்பட்ட பேருந்தை இயக்கிய பின்பு அது குறித்த அறிக்கை குழுவிற்கு அனுப்பிவைக்க வேண்டுமென்று குழு பரிந்துரை செய்கிறது.

குழுவின் குறிப்புரை

(8)

அணைக்கரை பாலப்பணிகள் முடிந்த பிறகு அவ்வழித்தடத்தில் பேருந்து இயக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு திருச்சி மண்டல தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழக பொது மேலாளருக்கு குழு பரிந்துரை செய்கிறது.
இம்மனு அறிக்கை எண். 10–ல் மனு எண். 655–உடன் இணைத்து நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு - II

குழுவினால் பரிந்துரை செய்யப்பட்ட, துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்ட மனுக்களின் விவரங்கள்

வரிசை எண் (1)	மனு எண் (2)	மனுதாரரின் பெயரும், முகவரியும் (3)	மனுவின் சுருக்கம் (4)	துறையின் பதிலுரை (5)	குழுவின் பரிந்துரை (6)
1	2735	திரு. எம். தங்கசாமி, வடக்கு அரிசன தெரு, உடையார்பாளையம், அரியலூர்.	பெரிய ஏரிக்கு தண்ணீர் வரக்கூடிய வரத்து வாரி ஓடையை மீண்டும் ஓடையாகவே தூர் வாரி செய்துதரக் கோருதல்	உடையார்பாளையம் பேரூராட்சிக்கு உட்பட்ட 5வது வார்டு வடக்கு அரிசனத் தெருவின் மேல்புறமாக புல எண்.308–இல் கிராமக் கணக்குகளின்படி திட்டப்பரப்பு 0.21.0 ஹெக்டர் வாரிபுறம்போக்கு வகைப்படுத்தப்பட்டு புலப்படத்தில் வண்டிப்பாதை விளக்கியாக காண்பிக்கப்பட்டுள்ளது. அதில் மண் சாலை அமைக்கப்பட்டு பொது மக்கள் பயன்படுத்தி வருகின்றனர். அச்சாலையினை ஒட்டிய பெரிய ஏரி நீர்வரத்து வாய்க்கால் நல்ல நிலையில் உள்ளது. எனவே அரசு ஆவணங்களில் உள்ளபடி வரத்துவாரியினை வரத்துவாரியாகவும், வண்டிப் பாதையினை சாலையாகவும், பராமரிக்கலாம். (பேரூராட்சி செயல் அலுவலர் உடையார்பாளையம் கடித ந.க.எண்.285/2012, நாள் 29.7.2019)	வட்டாட்சியர், வருவாய்க் கோட்ட அலுவலர் மற்றும் சம்பந்தப்பட்ட உயர் அலுவலர்கள் இணைந்து ஒரு சமாதானக் குழு அமைத்து இப்பிரச்சனைக்கு தீர்வு காண வேண்டும் என்றும், பேரூராட்சி செயல் அலுவலர் இம்மனு மீதான தொடர் நடவடிக்கை எடுத்து குழுவிற்கு அறிக்கை அளிக்க வேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் இறுதியறிக்கை	குழுவின் குறிப்புரை
(7)	(8)
உடையார்பாளையம் பேரூராட்சிக்கு உட்பட்ட 5வது வார்டு வடக்கு அரிசனத்தெருவின் மேல்புறமாக புல எண்.308ல் கிராம கணக்குகளின் படி திட்டப்பரப்பு 0.21.0 ஹெக்டர் வாரிபுறம்போக்கு வகைப்படுத்தப்பட்டு புலப்படத்தில் வண்டிப்பாதை விளக்கியாக காண்பிக்கப்பட்டுள்ளது. அதில் மண் சாலை அமைக்கப்பட்டு பொது மக்கள் பயன்படுத்தி வருகின்றனர். அச்சாலையினை ஒட்டிய பெரிய ஏரி நீர் வரத்துவாய்க்கால் நல்ல நிலையில் உள்ளது எனவே அரசு ஆவணங்களில் உள்ளபடி வரத்துவாரியினை வரத்து வாரியாகவும் வண்டிப்பாதையினை சாலையாகவும், பராமரிக்கலாம் என பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (உடையார்பாளையம் பேரூராட்சி செயல் அலுவலர் அவர்களின் 29.07.2019 ஆம் நாளிட்ட ந.க.எண். ஊ2/9672/2011.)	துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்	மனு எண்	மனுதாரரின் பெயரும், முகவரியும்	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
2	2738	திரு. சா. காளமேகம் மற்றும் பலர், பி–251, ராஜீவ் நகர், வாலாஜா நகரம் அஞ்சல், அரியலூர் மாவட்டம்.	தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் திருச்சி வீட்டு வசதி பிரிவால் விற்பனை செய்யப்பட்டுள்ள, அரியலூர், வாலாஜா நகரத்திலுள்ள எஸ்எம்டி என்கிற சிறிய நடுத்தர நகரிலுள்ள 564 வீடுகளுக்கு பட்டா கோருதல்.

துறையின் பதிலுரை

(5)

வீட்டுவசதி வாரியத்தின் பெயருக்கு பட்டா மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. வீட்டுவசதி வாரியத்தின் பெயருக்கு பட்டா பெயர் மாற்றம் செய்ததற்கான உத்தரவு பெறப்பட்ட பின்பு, மேற்படி திட்டத்தின் அனைத்து ஒதுக்கீடுதாரர்களுக்கும் அரியலூர் தாசில்தார் அவர்களால் பட்டா வழங்கப்படும்.

(தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம், திருச்சி அவர்கள் கடித எண்.எஸ்1/1309/2012, நாள்: 31.7.2012)

துறையின் இறுதியறிக்கை

(7)

திட்டப்பகுதியில் தனியாரிடம் நேரடி பேச்சு வார்த்தையின் மூலம் பெறப்பட்ட பட்டா நிலங்கள், அரசு நிலங்கள் மற்றும் இந்து சமய அறநிலையத் துறைக்கு சொந்தமான நிலங்கள் அடங்கும். இவற்றில் திட்டத்தில் பயன்படுத்தப்பட்ட 0.88.0 ஹெக்டர் நிலங்கள் தொடர்பாக, அரியலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் (கடித எண்.ந.க.ஆ.1/2546/2017 நாள் 24/08/2018) முன் நுழைவு அனுமதி ஆணையினை அனுப்பி வைக்க கோரப்பட்டது. முன் நுழைவு அனுமதி ஆணை எதுவும் வழங்கப்படவில்லை என குறிப்பிட்டு கடிதம் எஸ்1/1309/2012 நாள் 10/09/2018 மூலம் மாவட்ட ஆட்சித் தலைவர் அரியலூர் அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

குழுவின் பரிந்துரை

(6)

கோரிக்கை மூன்று துறைகளைச் சார்ந்தது என்பதால் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம், வருவாய்த் துறை, இந்து சமய அறநிலையத் துறை, மனுதாரர்கள் சங்கம் ஆகியவை ஒருங்கிணைந்து இரண்டு மாதத்திற்குள் முடித்து அறிக்கை அளிக்க வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது.

திட்டப் பகுதியில் பயன்படுத்தப்பட்ட இந்து சமய அறநிலையத் துறைக்கு சொந்தமான 0.42.0 ஹெக்டர் நிலத்திற்கான சந்தை மதிப்பினை நிர்ணயம் செய்து தரக்கோரி உதவி ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை (கடித எண்.ந.க.எண்185/1998/அ5 நாள் 18.01.2018) அவர்களால் அரியலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களை கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

அரியலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் 24.08.2018ஆம் நாளிட்ட கடித்தில் திட்டப்பகுதியில் பயன்படுத்தப்பட்ட நிலங்களுக்கு முன் நுழைவு அனுமதி வழங்கப்பட்ட நகலினை அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது. வீட்டு வசதி வாரியத்தால் பயன்படுத்தப்பட்ட அரசு நிலங்களுக்கு எவ்வித முன்னுழைவு அனுமதி வழங்கப்படவில்லை என்பதையும், திட்டம் செயல்படுத்துவதற்கு முன்பு நில கேட்பு படிவம் கடந்த 14/01/1992 அன்று அரியலூர் வருவாய் கோட்டாட்சியர் அவர்களுக்கு வீட்டு வசதி வாரியத்தால் அளிக்கப்பட்டுள்ளபடியால், இதனை சிறப்பினமாக கருதி, வாரியத்தின் பெயருக்கு பெயர் மாற்றம் செய்யக் கோரி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு இவ்வலுவலக 10/09/2018 ஆம் நாளிட்ட கடிதம் மூலம் கேட்டுக் கொள்ளப்பட்டது.

வீட்டு வசதி வாரியத்தால், செயல்படுத்தப்பட்ட திட்டப் பகுதியினுள் உள்ள அரசு நிலங்கள் தொடர்பாக செயற்பொறியாளர், பொதுப் பணித்துறை / நீர் ஆதாரத் துறை, அரியலூர் அவர்களை ஆய்வு செய்து தொழில் நுட்ப கருத்துருவினை விரிவான அறிக்கையாக சமர்பிக்க

கூடுதல் தலைமை செயலாளர் / நில நிர்வாக ஆணையர் அவர்கள் 09/08/2018ஆம் நாளிட்ட கடிதம் வாயிலாக கேட்டுக் கொள்ளப்பட்டதையடுத்து, 11/10/2018 ஆம் நாளிட்ட கடிதம் மூலம் மழைக்காலங்களில் நீர் செல்லும் பாதை பாதிப்பு ஏற்படும் நிலையில் உள்ளது என செயற்பொறியாளர், பொதுப்பணித்துறை / நீர் ஆதாரத் துறை, அரியலூர் அவர்களால் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து அரியலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் 02/11/2018ஆம் நாளிட்ட கடிதம் மூலம் அரசு புறம்போக்கு நிலங்களில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் கட்டிடங்கள் கட்டப்பட்டுள்ளமையால், நீர் நிலை பகுதிகளில் பாதிப்பு ஏற்படாதவாறு மாற்று வழிப் பாதையினை (வாய்க்கால்) அமைத்திடவும் அதனை உறுதி செய்து உடன் அறிக்கையினை அனுப்பி வைக்குமாறும் செயற்பொறியாளர் அவர்களை கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

செயற்பொறியாளர், பொதுப்பணித்துறை, அரியலூர் மற்றும் வீட்டு வசதி வாரிய செயற்பொறியாளருடன் இணைந்து கடந்த 28/01/2019 அன்று நீர் நிலை பகுதிகளில் பாதிப்பு ஏற்படாதவாறு மாற்று வழி பாதையினை அமைத்திட ஏதுவாக கூட்டு புலத் தணிக்கை செய்யப்பட்டது. கூட்டுப் புலத் தணிக்கையின் இறுதியில் திட்டப் பகுதியினுள் உள்ள அமைவிடம் தெற்கு நோக்கி தாழ்வாக இருப்பதையும், திட்ட பகுதியினுள் அனைத்து இடங்களிலும் மழைநீர் வடிகால் அமைக்கப்பட்டு தற்பொழுதும் பயன்பாட்டில் இருந்து வருவதையும் கண்டறியப்பட்டதையடுத்து, அரியலூர் பொதுப் பணித்துறை செயற்பொறியாளர் அவர்களால்,

(7)

திட்டப் பகுதியின் தென் மேற்கில் அமைந்துள்ள ஏரியினை சென்றடையும் வகையில் செயல்படுத்துமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டது.இதனையடுத்து, 13/02/2019 அன்று திட்டப் பகுதியின் எல்லையில் நீர்நிலை பகுதிகளில் பாதிப்பு ஏற்படாதவாறும், மழைநீர் அனைத்தும் வீணாகாமல் திட்டத்தின் தென்மேற்கில் அமைந்துள்ள ஏரியினை சென்றடையும் வகையில் ஏற்கனவே பராமரிப்பின்றி இருந்த வாய்க்கால் முழுவதையும் சீரமைத்து பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளது என்பதையும், அதற்கான புகைப்பட நகலினையும் இணைத்து மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு 14/03/2019ஆம் நாளிட்ட இதே கடித எண் வாயிலாக அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

செயற்பொறியாளர், பொதுப் பணித்துறை / நீர் ஆதாரத் துறை, அரியலூர் அவர்களின் 22/05/2019ஆம் நாளிட்ட கடிதத்தில், 20/05/2019 அன்று தள ஆய்வு மேற்கொள்ளப்பட்டதாகவும், மேற்கண்ட புல எண்களில் உள்ள திட்டப் பகுதியில் தெற்கு எல்லையில் நீர் நிலைகள் பாதிப்பு ஏற்படாதவாறு மழை நீர் அனைத்தும், வீணாகாமல் திட்டத்தின் தென் மேற்கில் அமைந்துள்ள ஏரியினை சென்றடையும் வகையில், ஏற்கனவே பராமரிப்பின்றி இருந்த சிறு வாய்க்காலையும் சீரமைத்து, பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளதாகவும், அருகில் உள்ள பஞ்சாயத்து ஏரிக்கு மழை நீரானது எளிதில் செல்லுமாறு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன என்றும், அரசின் விதிமுறைகளுக்கு உட்பட்டு தற்போது உள்ள நிலையின் தன்மை மாறாமல் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், திருச்சி வீட்டு வசதிப் பிரிவு அவர்களால் பராமரித்துக் கொள்ள வேண்டும் என குறிப்பிடப்பட்டு,

துறையின் இறுதியறிக்கை தொடர்ச்சி	குழுவின் குறிப்புரை
(7)	(8)
அறிக்கையானது மாவட்ட ஆட்சித் தலைவர் அரியலூர் அவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. இந்நிகழ்வுகளை குறிப்பிட்டு இதனை சிறப்பினமாக கருதி, வாரியத்தால் பயன்படுத்தப்பட்ட அரசு நிலங்களை வாரியத்தின் பெயருக்கு பெயர் மாற்றம் செய்து தரக் கோரி, கடிதம் மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களிடத்தில் நேரடியாக 28.06.2019 அன்று அளிக்கப்பட்ட போது, திட்டப்பகுதிகளில் வீட்டு வசதி வாரியத்தால் பயன்படுத்தப்பட்ட பல்வேறு புல எண்களில் உள்ள அரசு நிலங்களுக்கு, தனித்தனியாக தொழில்நுட்ப கருத்துரு செயற்பொறியாளர் பொது பணித்துறை அரியலூர் அவர்களிடத்தில் பெறப்பட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டது. இதனைத் தொடர்ந்து செயற்பொறியாளர், பொதுப் பணித்துறை / நீர் வள ஆதாரத் துறை, அரியலூர் அவர்களின் 22/05/2019ஆம் நாளிட்ட கடிதத்தின் மூலம் அரியலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. வீட்டு வசதி வாரியத்தால் மேற்கண்ட இரண்டு இனங்களில் உள்ள நிலங்களுக்கு அரசால் தெரிவிக்கப்படும் நில கிரயத் தொகை செலுத்தப்படும். நிலக் கிரயத் தொகை முழுவதும் செலுத்தப்பட்ட பின்பு கிராம கணக்குகளில் வீட்டு வசதி வாரியத்தின் பெயரில் பெயர் மாற்றம் வருவாய் துறையால் செய்த பின்பு பட்டா பெற இயலும். (வீட்டு வசதிப்பிரிவு செயற்பொறியாளர் (ம) நிர்வாக அலுவலர், திருச்சி – கடித எண்.எஸ்.1/309/2012, நாள் 29.07.2019)	துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்	மனு எண்	மனுதாரரின் பெயரும், முகவரியும்	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
3	2754	திரு. து. மணிமொழி, வங்காரம், வழி ஆர்.எஸ். மாத்தூர், செந்துறை வட்டம்.	அரியலூர் மாவட்டம் – செந்துறை வட்டம், சித்துடையார் – வங்காரம் வழியாக செல்லும் பழுதடைந்த விவசாய விலைப்பொருள் அங்காடி மைய அணுகு சாலையை சீரமைத்தல் மற்றும் ஆணைவாரி ஓடையில் பாலம் கட்டுதல்.

துறையின் பதிலுரை	குழுவின் பரிந்துரை
(5)	(6)
மனுதாரர் குறிப்பிடும் சாலையானது பொன்பரப்பி–திட்டக்குடி சாலை கி.மீ.7/6–ல் வலதுபுறமாக பிரிந்து சித்துடையார் – வங்காரம் ஆகிய கிராமங்களை இணைக்கும் 3 கி.மீ. நீளமுடைய செந்துறை ஊராட்சி ஒன்றிய சாலையாகும். இச்சாலையில் கி.மீ.0/0–2/6 வரையிலான பகுதியில் தார் தளம் மிகவும் சேதமடைந்து போக்குவரத்து மேற்கொள்ளுவதற்கு இயலாத வகையில் உள்ளது. மேலும் இச்சாலையில் கி.மீ.2/8–இல் ஆணைவாரி ஓடையானது சுமார் 100 மீ அகலத்திலுள்ளது. இவ்விடத்தின் குறுக்கே பாலம் அமைக்க தோராயமாக ரூ.6 கோடி மதிப்பீடு ஆகும் என தெரிவிக்கப்படுகிறது. இதனை ஏதேனும் சிறப்பு திட்டத்தின் மூலம் நிதியுதவி பெறப்படின் நெடுஞ்சாலைத் துறை மூலம் நிறைவேற்றலாம். (கோட்டப் பொறியாளர், ஊரகச் சாலைகள், திருச்சி அவர்களின் கடித எண்.817/2012இவஅ2/நாள் 27.7.2012)	செந்துறை ஊராட்சி ஒன்றிய அணுகு சாலையின் குறுக்கே பாலம் அமைக்கும் பணியை மேற்கொள்ள அரசுக்கு குழு பரிந்துரை செய்கிறது. மேலும் இதன் மீதான தொடர் நடவடிக்கை குறித்து கோட்டப் பொறியாளர், ஊரகச் சாலைகள், திருச்சி அவர்கள் அறிக்கை அளிக்க வேண்டுமென்று குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் இறுதியறிக்கை	குழுவின் குறிப்புரை
(7)	(8)
மனுதாரர் குறிப்பிட்டுள்ள செந்துறை ஊராட்சி ஒன்றிய சாலையில் கி.மீ. 2/8 இல் ஆனைவாரி ஓடையின் குறுக்கே ரூ.140.00 இலட்சத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி துறையின் மூலம் PMGSY திட்டத்தின் கீழ் பாலப்பணி முடிவுற்றது மற்றும் அணுகு சாலை அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது என்பதை தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. (உதவிக் கோட்டப் பொறியாளர்(நெ), அரியலூர் – கடித எண்.5/2018/இவஅ–2, நாள் 29.07.2019)	துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்	மனு எண்	மனுதாரரின் பெயரும், முகவரியும்	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
4	2755	செல்வகுமார், த/பெ சுப்ரமணியன், பெரியாக்குறிச்சி கிராமம், செந்துறை வட்டம், அரியலூர் மாவட்டம்.	லாரிகள் செல்ல தடை விதிக்கக் கோருதல் தரர்ச் சாலை போட வேண்டுதல்.

துறையின் பதிலுரை

(5)

கனரக சரக்கு வாகனங்கள் தணிக்கை செய்து, தணிக்கை அறிக்கைகள் வழங்கப்பட்டு 19.7.2012 முதல் 27.7.2012 வரை நான்கு தணிக்கை அறிக்கைகளுக்கு இணக்கக் கட்டணம் ரூ.26000/–வசூலிக்கப்பட்டுள்ளது. மேலும் தொடர்ந்து தணிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

ஆர்.எஸ். மாத்தூர் முதல் பெரியகுறிச்சி வரை மற்றும் சார்ந்த ஊர்களுக்கு சாலை வசதிகள் ஏற்படுத்தும் வகையில் தற்போது சாலைப் பணிகள் நடைபெற்று வருகிறது.

(வட்டாரப் போக்குவரத்து அலுவலர், அரியலூர் அவர்களின் கடித ந.க.எண்.18824/அ1/2012, நாள் 1.8.2012)

துறையின் இறுதியறிக்கை

(7)

ஆர் எஸ் மாத்தூர் முதல் பெரியக்குறிச்சி வரை மற்றும் அதனை சார்ந்த ஊர்களுக்கு சாலை வசதிகள் ஏற்படுத்தப்பட்டு தார்ச் சாலைகள் அமைக்கப்பட்டு அனைத்து இலகுரக மற்றும் கனரக வாகனங்கள் இயக்கக்கூடிய வகையில் தற்போது தார்ச் சாலைகள் நன்றாக பராமரிக்கப்பட்டு வருகிறது. எனவே அமைக்கப்பட்டுள்ள தார்ச் சாலைகள், லாரிகள் செல்வதற்கு ஏற்ற வகையில் அமைந்துள்ளதால் அச்சாலைகளில் மனுதாரர் கோரியுள்ளபடி லாரிகள் செல்ல / இயக்க தடை விதிக்க தேவையில்லை.

குழுவின் பரிந்துரை

(6)

சாலைப் பணியினை விரைந்து முடித்து குழுவிற்கு அறிக்கை அளிக்க வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் இறுதியறிக்கை தொடர்ச்சி....

குழுவின் குறிப்புரை

(7)

(8)

மோட்டார் வாகனச் சட்டம் மற்றும் விதிகளின்படி தமிழ்நாட்டில் உள்ள அனைத்து சாலைகளிலும் கனரக வாகனங்கள் இயக்க அனுமதி வழங்கப்படுகிறது. குறிப்பாக தடைசெய்யப்பட்ட சாலைகளில் மட்டும் இவ்வாகனங்களை இயக்க அனுமதி இல்லை.

போக்குவரத்து துறை சார்பாக தொடர்ந்து வாரம் இருமுறை பகல் மற்றும் இரவு நேரங்களில் குறிப்பாக அதிக பாரம், அதிக ஆட்களை ஏற்றுவது, ஓட்டுநர் உரிமம், பதிவுருக்கள் இல்லாமல் செல்வது, தகுதியான வயது இல்லாமல் வாகனம் இயக்குவது போன்று அனைத்து மோட்டார் வாகன சட்ட விதிகளின்படி இயக்காமல் செல்லும் அனைத்து வாகனங்களையும் தொடர் தணிக்கை செய்யப்பட்டு சோதனை அறிக்கைகள் தணிக்கையின் போது அளிக்கப்பட்டு வரி, அபராதம் மற்றும் இணக்க கட்டணம் பெறப்பட்டு அரசு கணக்கில் செலுத்தப்பட்டு வருகிறது.

(வட்டாரப் போக்குவரத்து அலுவலர், அரியலூர் – கடித எண்.18824/அ1/2012, நாள் 29.07.2019)

துறையின் பதில் படித்து பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண் (1)	மனு எண் (2)	மனுதாரரின் பெயரும், முகவரியும் (3)	மனுவின் சுருக்கம் (4)
5	2756 மற்றும் 11435	லூ. ஆரோக்கியசாமி, நெட்டலக்குறிச்சி கிராமம், உடையார்பாளையம் வட்டம், அரியலூர் மாவட்டம்.	விருத்தாசலம் முதல் கும்பகோணம் வழித் தடத்தில் பேருந்து இயக்கக் கோருதல்.

துறையின் பதிலுரை

(5)

மனுதாரர் கோரிய வழித்தடத்தில் 20 நாட்களில் பேருந்து இயக்கப்படும்.

(பொது மேலாளர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், திருச்சி அவர்களின் கடித எண்.த.அபோக/கும்ப/திருச்சி/வ/திவ1/150–2/2012, நாள்:29.7.2012 மற்றும் 4.9.12)

குழுவின் பரிந்துரை

(6)

மனுதாரர் கோரிய வழித்தடத்தில் நிறுத்தப்பட்ட பேருந்தை இயக்கிய பின் அது குறித்த அறிக்கையை குழுவிற்கு அனுப்பி வைக்க வேண்டுமென்று குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் இறுதியறிக்கை

(7)

1. கோரிக்கையிலுள்ள விருத்தாசலம் – கும்பகோணம் (வழி) கருவேபிலாங்குறிச்சி, ஆண்டிமடம், கொங்குநாட்டார்குப்பம், (கே.என்.குப்பம்), இரவாங்குடி, பாப்பாக்குடி, குறுக்குரோடு (x ரோடு) தஅபோக, திருச்சி மண்டல ஒரு புறநகரப் பேருந்து மூலம் இரண்டு நடைகள் 18.11.2012 முதல் இயக்கம் செய்யப்பட்ட பேருந்தின் தினசரி பயணிகளின் கொள்ளளவு பயன்பாடு 32.0%, EPKM-18 என மிகவும் குறைந்து காணப்பட்டதால் 20.03.2019 முதல் நிறுத்தம் செய்யப்பட்டது.

(7)

(8)

2. மேலும் இவ்வழித்தடத்தில் விருத்தாசலம் – ஆண்டிமடம் வரை உள்ள வழித்தடப் பகுதிக்கு ஒவ்வொரு 15 நிமிட இடைவெளியிலும் மற்றும் இரவாங்குடி, பாப்பாக்குடி பகுதிக்குஇயங்கொண்டம் – காட்டுமன்னார்குடி வழித்தட நகரப் பேருந்து (001B) மூலம் தினசரி 12 நடைகளும், பாப்பாக்குடி – அணைக்கரை வழித்தட பகுதியில் ஒவ்வொரு 10 நிமிட இடைவெளியிலும் பேருந்துகள் இயக்கப்படுகிறது.

எனவே, கோரிக்கையின் வழித்தடம் முழுவதும் பகுதி, பகுதியாக மேற்கண்டுள்ளவாறு மொத்தம் 12 நடைகள் இயக்கப்படுகிறது. இவ்வழித்தடம் போதுமான பேருந்து வசதி பெற்றுள்ளது என்பதை அன்புடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

(தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம்) பொது மேலாளர், திருச்சி – தஅபோக/கும்ப/திருச்சி/வ /திவ1/11–3/2014, நாள் 01.08.2019)

மனுக்கள் குழுவின் (2018–2020) பத்தாவது அறிக்கையில் படித்துப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

வரிசை எண் (1)	மனு எண் (2)	மனுதாரரின் பெயரும், முகவரியும் (3)	மனுவின் சுருக்கம் (4)
6	2760	திரு. ம. இராவணன், அசரவீரன்குடிக்காடு, செந்துறை வட்டம், அரியலூர் மாவட்டம்.	அசரவீரன்குடிக்காடு துணை சுகாதார நிலையத்தை தரம் உயர்த்தக் கோருதல்.
	மற்றும் 4916	திரு. இரா. மங்கேஸ்கர், ஊராட்சி மன்ற துணைத் தலைவர், அசரவீரன்குடிக்காடு, செந்துறை வட்டம், அரியலூர் மாவட்டம்.	

துறையின் பதிலுரை

(5)

பொது சுகாதாரம் – அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள்–01.07.2009 நாளன்று மத்திய ஆண்டு மதிப்பீட்டின் படி 156 புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் தேசிய ஊரக நல வாழ்வு திட்ட உதவியுடன் தோற்றுவிக்க விவரங்கள் அடிப்படையில் ந.க.எண்.5933/அ7/2009, நாள்: 18/3/2010–இன் கடிதப்படி செந்துறை தாலுக்கா அசாவீரன்குடிக்காடு, அரசு ஆரம்ப சுகாதார நிலையமாக தரம் உயர்த்துவதற்கு வரிசை எண்.5இல் பரிந்துரை செய்து கருத்துரு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

துணை இயக்குநர், சுகாதாரம், அரியலூர் அவர்களின் கடித ந.க.எண்.5933/அ7/2010, நாள்: 18.3.2010)

துறையின் இறுதியறிக்கை

(7)

புதியதாக ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கக் கோரும் பகுதியின் மக்கள் தொகை 30,000 கொண்டதாக இருக்க வேண்டும். மேலும் அந்நிலையத்திலிருந்து 8 கி.மீ தொலைவில் வேறு எந்த ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் அரசு மருந்துவமனைகள் இயங்குதல் கூடாது என அரசாணை உள்ளது.

குழுவின் பரிந்துரை

(6)

அசரவீரன்குடிக்காடு துணை சுகாதார நிலையத்தை ஆரம்ப சுகாதார நிலையமாக தரம் உயர்த்துதல் மீதான தொடர் நடவடிக்கை குறித்து அறிக்கை அளித்திட வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது.

(7)	குழுவின் குறிப்புரை (8)
தற்போது அசரவீரன்குடிக்காடு பகுதியின் மக்கள் தொகை 7000 ஆக உள்ளது. அந்நிலையத்திலிருந்து 6 கி.மீ தொலைவில் மணக்குடையான் ஆரம்ப சுகாதார நிலையம் இயங்கி வருகிறது. எனவே, அரசாணை விதிகளின் படி, அசரவீரன்குடிக்காடு துணை சுகாதார மையத்தில் புதிதாக அரசு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க சாத்திய கூறுகள் இல்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. (துணை இயக்குநர் சுகாதாரப் பணிகள், அரியலூர் – ந.க.எண்.6509/அ4/18, நாள் 31.07.2019)	மனுக்கள் குழுவின் (2018–2020) பதினொன்றாவது அறிக்கையில் படித்துப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

வரிசை எண் (1)	மனு எண் (2)	மனுதாரரின் பெயரும், முகவரியும் (3)	மனுவின் சுருக்கம் (4)
7	4716 மற்றும் 4717	திரு. எ. காந்தி, ஊராட்சி மன்றத் தலைவர், சின்னப்பட்டாக்காடு ஊராட்சி, திருமானூர் ஊராட்சி ஒன்றியம், அரியலூர் மாவட்டம் திரு. கே. சிவலிங்கம், ஊராட்சி மன்றத் தலைவர் காமரசவள்ளி ஊராட்சி, திருமானூர் ஊராட்சி ஒன்றியம், அரியலூர் மாவட்டம்.	திருமானூர் ஊராட்சி ஒன்றியத்தில் அமைந்துள்ள சுக்கிரன் ஏரியை தூர்வாரக் கோருதல்.

துறையின் பதிலுரை

(5)

அரியலூர் வட்டம், திருமானூர் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள சுக்கிரன் ஏரியை தூர்வாருதல், கரையினை பலப்படுத்துதல், மதகுகளை சீரமைத்து களைகளை அகற்றுதல் மற்றும் வரத்து வாய்க்கால்களை புனரமைத்தல் ஆகிய பணிகளை PW(W2) துறை நாள் 11.01.2012–இல் ரூ.225.60 இலட்சத்தில் 2014–15ஆம் நிதியாண்டில் மேற்கொள்வதற்கு அரசாணை வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட அனைத்து பணிகளும் 2014–15ஆம் ஆண்டு செய்து முடிக்கப்படும். (பொதுப்பணித் துறை நீர்வள ஆதார அமைப்பு அவர்களின் கடித எண்.511/கோ.41/2012/கப/நாள் 07.08.2012)

துறையின் இறுதியறிக்கை

(7)

அரியலூர் வட்டம், திருமானூர் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள சுக்கிரன் ஏரியை தூர்வாரி கரையினை பலப்படுத்தி, மதகுகளை சீரமைக்கும் பணி ரூ.225.60 லட்சத்திற்கு பழமை வாய்ந்த ஏரிகள் சீரமைக்கும் திட்டத்தில் நிதியாதாரம் பெற்று மார்ச் 2015ல் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. தற்பொழுது சுக்கிரன் ஏரி வழங்கு வாய்க்கால் 1,2,3 மற்றும் அப்பாசன வடிகால்களான ஆணை வாரிஓடை ஆகியவைகள் தூர்வார ரூ.57 இலட்சத்தில் அரசாணை எண்.205 பொப (W2) நாள் 18/07/2019 ன்படி நிர்வாக ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. தற்பொழுது இப்பணி செயலாக்கப்படவுள்ளது என்ற தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.
(நீ.ஆ.து., ஆ.பா.கோட்டம் செயற்பொறியாளர் பொ.ப.து., திருச்சி– க.எண்.528M/2019/கோ.206/வ1, நாள் 30.07.2019)

குழுவின் பரிந்துரை

(6)

திருமானூர் ஊராட்சி ஒன்றியம், சுக்கிரன் ஏரியை தூர்வாரும் பணியை உரிய காலத்திற்குள் முடித்து அது தொடர்பான அறிக்கையை குழுவிற்கு அனுப்பிவைக்க வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது.

குழுவின் குறிப்புரை

(8)

துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண் (1)	மனு எண் (2)	மனுதாரரின் பெயரும், முகவரியும் (3)	மனுவின் சுருக்கம் (4)
8	4718	திருமதி செல்வகுமாரி, த/பெ. காமராஜ், தூத்தூர், திருமானூர் ஊராட்சி ஒன்றியம், மற்றும் அரியலூர் மாவட்டம்.	முத்துவாஞ்சேரி – தூத்தூர் கடம்பூர் வழியாக கும்பகோணத்தை இணைக்கும் பாலத்தை கட்டித்தரக் கோருதல்.
	4724	திருமதி அனந்தநாயகி, க/பெ. செந்தில், ஊராட்சிமன்றத் தலைவர், கோமான், தூத்தூர், திருமானூர் ஊராட்சி ஒன்றியம், அரியலூர் மாவட்டம்.	

துறையின் பதிலுரை (5)	குழுவின் பரிந்துரை (6)
தூத்தூர் முதல் தா. பழூர் வழியாக செல்லும் சாலையில் கொள்ளிடத்தில் மருதையாறு இணைக்கின்ற இடமாக உள்ளது. இந்த இடத்தில் பாலம் கட்டுவது தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதில் இதற்கான உத்தேச மதிப்பீடு ரூ.6.00 கோடியாகும். இந்த சாலை ஊராட்சி ஒன்றிய சாலையாக உள்ளதால், இதனை நெடுஞ்சாலைத் துறைக்கு ஒப்படைத்த பின்னர், இந்த பாலம் கட்டப்பட வேண்டும் என்பதால் இந்த சாலையை நெடுஞ்சாலை துறைக்கு ஒப்படைக்க அனுமதி கோரி ஊரக வளர்ச்சி அரசு செயலர் அவர்களுக்கு அரியலூர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மூலம் கருத்துரு அனுப்பப்பட்டு, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் நேர்முக கடிதம் ந.க.எண்.3097/2009/அ3, நாள் 10.08.2012 மூலம் நினைவூட்டப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.உ), திருமானூர் அவர்களின் ந.க.எண்.அ2/2640/2012, நாள்: 27.08.2012)	இம்மனுவின் மீதான தொடர் நடவடிக்கை குறித்த அறிக்கையை குழுவிற்கு அனுப்ப வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் இறுதியறிக்கை	குழுவின் குறிப்புரை
(7)	(8)
தூத்தூர் முதல் தா. பழூர் வழியாக செல்லும் சாலையில் கொள்ளிடத்தில் மருதையாறு இணைக்கின்ற இடமாக உள்ளது. இந்த இடத்தில் பாலம் கட்டுவது தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதில் இதற்கான உத்தேச மதிப்பீடு ரூ.6.00 கோடியாகும். இந்த சாலை ஊராட்சி ஒன்றிய சாலையாக உள்ளதால், இதனை நெடுஞ்சாலைத் துறைக்கு ஒப்படைத்த பின்னர், இந்த பாலம் கட்டப்பட வேண்டும் என்பதால் இந்த சாலையை நெடுஞ்சாலை துறைக்கு ஒப்படைக்க அனுமதி கோரி ஊரக வளர்ச்சி அரசு செயலர் அவர்களுக்கு அரியலூர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மூலம் கருத்துரு அனுப்பப்பட்டு, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் நேர்முக கடிதம் ந.க.எண்.3097/2009/அ3, நாள் 10.08.2012 மூலம் நினைவூட்டப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ), திருமானூர் – ந.க.எண்.அ2/2833/18, நாள் 31.07.2019)	துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண் (1)	மனு எண் (2)	மனுதாரரின் பெயரும், முகவரியும் (3)	மனுவின் சுருக்கம் (4)
9	4719	திரு. பி. சுந்தர்ராஜ், ஊராட்சி மன்றத் தலைவர், பளிங்காநத்தம் முதல்நிலை ஊராட்சி, திருமானூர் ஒன்றியம், அரியலூர் மாவட்டம்.	பளிங்காநத்தம் கிராமத்தில் புள்ளம்பாடி வாய்க்காலின் முதல் ஏரியான மானோடை ஏரியினை தூர்வாரி கரையினை பலப்படுத்த வேண்டுதல்.

துறையின் பதிலுரை (5)	குழுவின் பரிந்துரை (6)
அரியலூர் வட்டம் பளிங்காநத்தம் கிராமம், மானோடை ஏரியினை தூர்வாரி கரையினை பலப்படுத்தி மதகு மற்றும் கிளை கால்வாய்களை சீரமைக்க ரூ.90.00 இலட்சம் நிதி தேவைப்படுகிறது. மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் 3.8.2012 அன்று மேற்கண்ட ஏரியினை பார்வையிட்டு மதிப்பீட்டினை அரசுக்கு அனுப்பிவைக்குமாறு அறிவுறுத்தியுள்ளார்கள். எனவே, மேற்கண்ட ஏரியினை புனரமைக்க அரசிடமிருந்து உரிய ஆணை பெறப்பட்டவுடன் அதற்கேற்ப பணிகள் மேற்கொள்ளப்படும். (பொதுப்பணித்துறை, நீர்வள ஆதார அமைப்பு, அவர்களின் கடித எண்.513/கோ.41/20120கப/, நாள்: 07.08.2012)	மானோடை ஏரியினை தூர்வாரி கரையினை பலப்படுத்தும் பணிகள் முடிக்கப்பட்டவுடன் குழுவிற்கு அறிக்கை அளிக்கவேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் இறுதியறிக்கை (7)	குழுவின் குறிப்புரை (8)
அரியலூர் மாவட்டம், பளிங்காநத்தம் கிராமத்தில் உள்ள மானோடை ஏரியினை தனியார் நிறுவனங்களின் கூட்டாண்மை சமூக பொறுப்புணர்வு திட்டத்தின் (CSR) அடிப்படையில் எடுத்துக்கொள்ளப்பட்டு ஜூன் 2017ல் கரைகள் பலப்படுத்தப்பட்டு சீரமைக்கப்பட்டுள்ளது. மேலும் தற்பொழுது மானோடை ஏரி இதர பணிகள் புனரமைக்க நந்தியார் – கூழையார் உபவடிநில திட்டத்தில் தமிழ்நாடு நீர்வள நிலவள திட்டம் 2ன் கீழ் திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு உலக வங்கியின் நிதியாதாரம் பெற நடவடிக்கையில் உள்ளன. (நீ.ஆ.து., ஆ.பா.கோட்டம் செயற்பொறியாளர் பொ.ப.து., திருச்சி – க.எண்.530M/2019/கோ.206/வ1, நாள் 30.07.2019)	துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண் (1)	மனு எண் (2)	மனுதாரரின் பெயரும், முகவரியும் (3)	மனுவின் சுருக்கம் (4)
10	4721	திரு. தில்லை திருவாசகமணி, கண்டிராதீத்தம் ஊராட்சி, திருமானூர் ஒன்றியம், அரியலூர் மாவட்டம்.	கண்டிராதீத்தம் ஏரியை தூர்வாரி கரையை பலப்படுத்தி மதகுகளை சீர்படுத்தித் தரக்கோருதல்.

துறையின் பதிலுரை

(5)

அரியலூர் மாவட்டம், கண்டிராதீத்த கிராமம், கண்டிராதீத்தம் பெரிய ஏரியானது 1835.20 ஹெக்டேர் நிலங்கள் பாசன வசதி அளிக்கிறது. இக்குளத்தினை தூர்வாரி கரைகள் பலப்படுத்தி மதகு சீரமைக்க ரூ.4.25 கோடிக்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வருகிறது. இம்மதிப்பீட்டிற்கு அரசின் நிர்வாக ஒப்புதல் மற்றும் நிதி ஆதாரம் பெறப்பட்டதும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். (பொதுப்பணித் துறை, நீர்வள ஆதார அமைப்பு, அவர்களின் கடித எண்.கோ.6/2012/உசெபொ(லா)/, நாள்: 03.08.2012)

குழுவின் பரிந்துரை

(6)

ஆற்றுப் பாதுகாப்புத் திட்டத்தில் நீர்வளத்திற்கென்று ஒதுக்கப்படும் நிதியிலிருந்து மனுதாரர் கோரிய பணியினை மேற்கொண்டு இது தொடர்பான அறிக்கையை குழுவிற்கு அனுப்பிவைக்க வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் இறுதியறிக்கை

(7)

ஆற்றுப் பாதுகாப்பு கோட்டத்திற்கு ஒவ்வொரு ஆண்டும் பாசன திட்டங்களுக்கென்று நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இதன்படி கண்டிராதீர்த்தம் பெரிய ஏரி பாசனமளிக்கும் நந்தியார் வாய்க்கால் பாசன திட்டத்திற்க ரூ.40.00 இலட்சம் மட்டுமே ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இந்நிதி ஒதுக்கீட்டில் நந்தியார் வாய்க்கால் மூலம் பாசனமளிக்கும் வாய்க்கால் வடிகால் மற்றும் ஏரிகள்

குழுவின் குறிப்புரை

(8)

துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

ஆகியவைகள் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்படுவதால் கண்டிராதீர்த்தம் ஏரி புனரமைக்க போதுமான நிதி இல்லை. எனவே கண்டிராதீர்த்தம் பெரிய ஏரி தூர்வாரி மதகு சீரமைக்க ரூ.3.50 கோடிக்கான மதிப்பீடு தயார் செய்து நபார்டு திட்டத்தின் கீழ் சிறப்பு நிதியாதாரம் பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இம்மதிப்பீடு சில தொழில்நுட்ப குறைகளை நிவர்த்தி செய்யும் பொருட்டு திட்டம் மற்றும் உருவாக்கம் தலைமைப் பொறியாளரிடமிருந்து திரும்பப் வரப்பெற்றது. தற்பொழுது கண்டிராதீர்த்தம் ஏரியினை புனரமைக்க நந்தியார்–கூழையார் உபவடிநில திட்டத்தில் தமிழ்நாடு நீர்வள நிலவள திட்டம் 2ன் கீழ் திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு உலக வங்கியில் நிதியாதாரம் பெற நடவடிக்கையில் உள்ளன.
(செயற்பொறியாளர் பொ.ப.து., நீ.ஆ.து. ஆ.பா.கோட்டம், திருச்சி கடித எண்.ஒ.531M/2019/கோ.206/211, நாள் 31.07.2019)

வரிசை எண் (1)	மனு எண் (2)	மனுதாரரின் பெயரும், முகவரியும் (3)	மனுவின் சுருக்கம் (4)
11	4723	திரு. கோ. சுப்ரமணியன், ஒன்றியக்குழு உறுப்பினர், அழகியமணவாளம், திருமானூர் ஊராட்சி ஒன்றியம், அரியலூர் வட்டம்.	கீழராமநல்லூர்–மேலராமநல்லூர் கிராமத்தை இணைத்து இணைப்பு சாலை மற்றும் மேம்பாலம் அமைத்தல்.

துறையின் பதிலுரை

(5)

அழகியமணவாளம் ஊராட்சியில் மேலராமநல்லூர் முதல் கீழராமநல்லூர் வரை 1.50 கி.மீ ஆகும். இதில் மேலராமநல்லூர் கீழராமநல்லூர் இணைக்க பொதுவழி பாதை இல்லை. பட்டா நிலங்கள் தான் உள்ளது. இதனால் இணைப்புப் பாதை அமைக்க இயலவில்லை. நில ஆர்ஜிதம் செய்ய சாத்தியக் கூறுகள் குறித்து ஆய்வு செய்யப்பட்டு பின்னர், நில ஆர்ஜித கருத்துரு அனுப்பிட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

(வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ), திருமானூர் அவர்களின் கடித ந.க.எண்.அ2/2640/2012, நாள் 22.08.2012)

குழுவின் பரிந்துரை

(6)

கீழராமநல்லூர் மேலராமநல்லூர் கிராமத்தை இணைத்து சாலை மற்றும் மேம்பாலம் அமைப்பதற்கு உரிய நடவடிக்கை மேற்கொண்டு அது தொடர்பான அறிக்கையை வட்டாரவளர்ச்சி அலுவலர் குழுவிற்கு அனுப்பிவைக்க வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் இறுதியறிக்கை

(7)

அரியலூர் மாவட்டம், திருமானூர் ஊராட்சி ஒன்றியம், அழகியமணவாளம் ஊராட்சி கீழராமநல்லூர் / மேலராமநல்லூர் கிராமங்களை இணைக்கும் இணைப்பு சாலை மற்றும் மேம்பாலம் அமைக்கும் பணிக்கான இடம் தனிநபர் இடமாக இருப்பதால் அமைதி பேச்சுவார்த்தை மூலம் பணிக்கு தேவையான இடம் தனி நபர்களிடமிருந்து பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. வருவாய் துறை மூலம் நிலம் கையகப்படுத்தப்பட்டவுடன் இணைப்பு சாலை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

மேலராமநல்லூர் தஞ்சாவூர் மாவட்டத்துடன் இணைக்கும் மேம்பாலம் அமைக்கும் பணி பொதுப்பணித்துறை தொடர்புடையதாகும்.

(வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ), திருமானூர் – ந.க.எண்.அ2/2833/18, நாள் 31.07.2019)

குழுவின் குறிப்புரை

(8)

துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு - III

குழுவினால் பரிந்துரை செய்யப்பட்ட நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்பட்ட மனுக்களின் விவரங்கள்

வரிசை எண் (1)	மனு எண் (2)	மனுதாரரின் பெயரும், முகவரியும் (3)	மனுவின் சுருக்கம் (4)	துறையின் பதிலுரை (5)	குழுவின் பரிந்துரை (6)
1	2740	திரு. ஜெ. வெங்கடேஸ்வரன், தெற்கு தெரு, அங்கராயநல்லூர், ஜெயங்கொண்டம், அரியலூர் மாவட்டம்.	சாலை வசதி கோருதல்	ஜெயங்கொண்டம் ஊராட்சி ஒன்றியம், ஜெயங்கொண்டம் – தா. பழூர் மெயின்ரோட்டிலிருந்து அங்கராயநல்லூர் ஊராட்சி தெற்கு தெருவிற்கு செல்லும் சாலையில் 0.640 கி.மீ தூரம் தற்போது மெட்டல் சாலையாக உள்ளது. இச்சாலையை தார் சாலையாக அமைப்பதற்கு ரூ.9.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. இந்த சாலை அமைப்பதற்கு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத்திட்டத்தில் எடுத்து செய்வதற்கு ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் அவர்களால் பரிந்துரை செய்ய கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி கிடைத்தவுடன் சாலை அமைத்துத் தரப்படும். (வட்டார வளர்ச்சி அலுவலர், ஜெயங்கொண்டம் கடித ந.க.அ3/160/2012, நாள்: 27.07.2012)	சாலை அமைக்கும் பணி மீதான மேல்நடவடிக்கை மேற்கொண்டு ஜெயங்கொண்டம் வட்டார வளர்ச்சி அலுவலர் அவர்கள் குழுவிற்கு அறிக்கை அளிக்க வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் இறுதியறிக்கை (7)	குழுவின் குறிப்புரை (8)
ஜெயங்கொண்டம் ஊராட்சி ஒன்றியம், ஜெயங்கொண்டம் – தா. பழூர் மெயின்ரோட்டிலிருந்து அங்கராயநல்லூர் ஊராட்சி தெற்கு தெருவிற்கு செல்லும் சாலையில் 2017–18ஆம் ஆண்டு TNRRIS திட்டத்தின்கீழ் ரூ.50.61 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு, தார்சாலை பணி முடிக்கப்பட்டுள்ளது என்பதை பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (வட்டார வளர்ச்சி அலுவலர், ஜெயங்கொண்டம் – கடித ந.க.ஆ4/2638/2018, நாள் 07.08.2019)	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படுகிறது.

வரிசை எண் (1)	மனு எண் (2)	மனுதாரரின் பெயரும், முகவரியும் (3)	மனுவின் சுருக்கம் (4)
2	2745	திரு. கே. பாலகிருஷ்ணன், வங்கி மேலாளர் ஓய்வு, எண்.73, ஜி–2, பெரியார் நகர், முதல் தெரு (வடக்கு), அரியலூர்.	பெரியார் நகர் முதல் தெரு (வடக்கு) சாலை வசதி மற்றும் கழிவு நீர் வடிகால் பராமரிப்பு கோருதல்.

துறையின் பதிலுரை

(5)

1) மனு எண்.2745–ல் குறிப்பிடப்பட்டுள்ள பெரியார் நகர் முதல் தெரு 26.07.2012 அன்று நகராட்சி ஆணையரால் நேரில் ஆய்வு செய்யப்பட்டது.
2) தற்போது நடைபெற்று வரும் பாதாள சாக்கடைத் திட்டப் பணிகள் 01.09.2012–ம் தேதிக்குள் முடிவடையும் என தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது.
3) ஒருங்கிணைந்த நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் 2012–2013–ல் சாலை அமைக்கும் பணிக்கு முன்மொழிவு அனுப்பப்பட்டுள்ளது.
4) அதற்கான ஒப்புதல் பெறப்பட்ட பின்னர் பணிகள் மேற்கொள்ளப்படும்.
(செயல் அலுவலர், நகராட்சி, அரியலூர் அவர்களின் கடித ந.க.எண்.அ1/1236/2012, நாள்: 27.07.2012)

குழுவின் பரிந்துரை

(6)

பாதாள சாக்கடைத் திட்டப் பணிகள் முடிவடைந்தவுடன் சாலை அமைத்து அது தொடர்பான அறிக்கையை குழுவிற்கு அனுப்பிவைக்க வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் இறுதியறிக்கை

(7)

அரிலூர் நகராட்சிக்குட்பட்ட பெரியார் நகர் முதல் தெருவில் (வடக்கு) தமிழ்நாடு நகர்புற சாலைகள் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் மழைநீர் வடிகாலுடன் கூடிய சாலை அமைக்கப்பட்டு பொது மக்கள் பயன்பாட்டில் உள்ளது.
நகராட்சி, ஆணையர் அரியலூர் –
ந.க.எண்.அ1/1236/2012, நாள் 31.07.2019)

குழுவின் குறிப்புரை

(8)

நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படுகிறது.

வரிசை எண் (1)	மனு எண் (2)	மனுதாரரின் பெயரும், முகவரியும் (3)	மனுவின் சுருக்கம் (4)
3	2746	எஸ். நல்லதம்பி, கூத்தன்குடி வடக்குத் தெரு, இடங்கண்ணி அஞ்சல், உடையார்பாளையம் வட்டம், அரியலூர் மாவட்டம்.	மயானப் பாதை செப்பனிடக் கோருதல்

துறையின் பதிலுரை

(5)

ஊராட்சி நிதியில் மயானப்பாதை அமைத்துக் கொடுக்க ஊராட்சி மன்றத் தலைவர் ஒப்புதல் அளித்ததன் பேரில் வேலைக்கான மதிப்பீடு தயார் செய்து, பணிகள் மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது. (வட்டார வளர்ச்சி அலுவலர், ஊராட்சி ஒன்றியம், தா. பழூர், அவர்களின் கடித ந.க.எண்.ஆ2/1837/2012, நாள் 27.7.2012)

குழுவின் பரிந்துரை

(6)

தாய் திட்டத்தில் உபரி நிதி இருப்பின் அந்நிதியிலிருந்து மயானப் பாதை அமைத்துத் தர வேண்டுமென்றும் அவ்வாறு இல்லையெனில் ஊராட்சித் தலைவர் நிதியிலிருந்து இப்பணியை முடித்து வட்டார வளர்ச்சி அலுவலர் குழுவிற்கு அறிக்கை அளிக்க வேண்டுமென்றும் குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் இறுதியறிக்கை

(7)

தா. பழூர் ஊராட்சி ஒன்றியம், தா.பழூர் முதல்நிலை ஊராட்சிக்குட்பட்ட கூத்தங்குடி கிராமத்தில் பொது நிதி திட்டத்தின் கீழ் மயானப்பாதைக்கு மெட்டல் சாலை அமைக்கப்பட்டுள்ளது என்பதை பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஊராட்சி ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.உ) தா. பழூர் – ந.க.எண்.ஆ4/2917/2018, நாள் 08.08.2019)

குழுவின் குறிப்புரை

(8)

நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படுகிறது.

வரிசை எண்	மனு எண்	மனுதாரரின் பெயரும், முகவரியும்	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
4	2747	ஊர் பொது மக்கள், வீரசோழபுரம், தழுதாழைமேடு, உடையார்பாளையம் வட்டம், அரியலூர் மாவட்டம்.	ஜெயங்கொண்டம் ஊராட்சிக்கு உட்பட்ட வீரசோழபுரம் கிராம பேருந்து நிலையத்தை புதுப்பித்துத் தரக் கோருதல்.

துறையின் பதிலுரை	குழுவின் பரிந்துரை
(5)	(6)
ஜெயங்கொண்டம் ஊராட்சி ஒன்றியம், தழுதாழைமேடு ஊராட்சி வீரசோழபுரம் கிராமத்தில் உள்ள பேருந்து நிலையம் பழுதடைந்துள்ளதை பழுதுநீக்கம் செய்து புதுப்பிக்க தழுதாழைமேடு ஊராட்சி நிதியிலிருந்து ரூபாய் 45000/– மதிப்பீட்டில் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. (வட்டார வளர்ச்சி அலுவலர், ஊராட்சி ஒன்றியம், ஜெயங்கொண்டம் அவர்களின் கடித எண்.ந.க.அ3/160/2012, நாள்: 27.07.2012)	பழுதடைந்துள்ள பேருந்து நிழற்குடையை புதுப்பித்து அது குறித்த அறிக்கையினை வட்டார வளர்ச்சி அலுவலர் குழுவிற்கு அனுப்ப வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் இறுதியறிக்கை	குழுவின் குறிப்புரை
(7)	(8)
ஜெயங்கொண்டம் ஊராட்சி ஒன்றியம், தழுதாழைமேடு ஊராட்சி வீரசோழபுரம் கிராமத்தில் உள்ள பேருந்து நிலையம் பழுதடைந்துள்ளதை பழுதுநீக்கம் செய்து புதுப்பிக்க தழுதாழைமேடு ஊராட்சி நிதியிலிருந்து ரூபாய் 45000/– மதிப்பீட்டில் பழுதுநீக்கம் செய்யப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (ஊராட்சி ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலர், ஜெயங்கொண்டம், கடித எண்.ந.க.ஆ4/2638/2018, நாள் 07.08.2019)	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படுகிறது.

வரிசை எண் (1)	மனு எண் (2)	மனுதாரரின் பெயரும், முகவரியும் (3)	மனுவின் சுருக்கம் (4)
5	2749	என். சுப்ரமணியன், உழவர் ஆய்வுமன்ற அமைப்பாளர்கள் சங்கம், ஜெயங்கொண்டம், அரியலூர் மாவட்டம்.	நகர மையங்களில் நீர்நிலை குளங்களில் கழிவுநீர் கலப்பதை தடுத்து குளங்களை சீரமைக்கக் கோருதல்.

துறையின் பதிலுரை (5)	குழுவின் பரிந்துரை (6)
ஜெயங்கொண்டம் நகராட்சிக்குட்பட்ட புதுவனேரியில் இந்நகராட்சி நிர்வாகத்தால் வடிகால் அமைத்து சாக்கடை நீரை அதில் சேர வழிவகை செய்யவில்லை என்பதையும் அப்பகுதியில் வசிக்கும் பொதுமக்கள் வழியாகவும் சாக்கடை நீர் மேற்படி ஏரியில் விடப்படுவதில்லை. கொக்கனேரி செல்லும் சாலையில் இந்நகராட்சி நிர்வாகத்தால் மழைநீர் வடிகால் கட்டப்பட்டு பயன்பாட்டில் இருந்து நாளடைவில் அம்மழைநீர் வடிகாலில் அப்பகுதியில் வசிக்கும் பொதுமக்கள் வீடுகளின் கழிவுநீரை விட்டு அந்த கொக்கனேரியில் கலக்காத வண்ணம் சம்மந்தப்பட்ட நபர்களுக்கு அறிவிப்பு வழங்கி தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. கோடாம்பிள்ளை குட்டையில் தற்சமயம் தண்ணீர் இல்லை. மேற்படி ஏரிகளில் இந்நகராட்சியால் மீன்பாசி குத்தகைவிடப்படுவதில்லை. (செயல் அலுவலர் நகராட்சி, ஜெயங்கொண்டம் அவர்களின் கடித ந.க.எண்.ஆ3/510/2012/30.7.2012)	மனுதாரரின் கோரிக்கை மீதான தொடர் நடவடிக்கை குறித்து செயல் அலுவலர் குழுவிற்கு அறிக்கை அளித்திட வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் இறுதியறிக்கை	குழுவின் குறிப்புரை
(7)	(8)
ஜெயங்கொண்டம் நகராட்சிக்குட்பட்ட பதுவனேரியில் இந்நகராட்சி நிர்வாகத்தால் வடிகால் அமைத்து சாக்கடை நீரை அதில் சேர வழிவகை செய்யவில்லை என்பதையும் அப்பகுதியில் வசிக்கும் பொதுமக்கள் வழியாகவும் சாக்கடை நீர் மேற்படி ஏரியில் விடப்படுவதில்லை என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். 2015–16ஆம் ஆண்டு பொதுநிதியின் கீழ் ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டில் கொக்கனேரியின் வடபுறம் தடுப்புச் சுவர் அமைத்தும், கழிவுநீர் கொக்கனேரியில் கலக்காத வண்ணம் R.C.C குழாய்கள் அமைக்கப்பட்டும் பயன்பாட்டில் இருந்து வருகிறது. மேற்படி ஏரிகளில் இந்நகராட்சியால் மீன்பாசி குத்தகை விடப்படுவதில்லை என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். (நகராட்சி ஆணையர் (பொ), ஜெயங்கொண்டம், கடித எண். அ3/510/2012, நாள் 26.07.2019)	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படுகிறது.

வரிசை எண் (1)	மனு எண் (2)	மனுதாரரின் பெயரும், முகவரியும் (3)	மனுவின் சுருக்கம் (4)
6	2750	என். சுப்ரமணியன், உழலர் ஆய்வுமன்ற அமைப்பாளர்கள் சங்கம், ஜெயங்கொண்டம், அரியலூர் மாவட்டம்.	தேசப்பிதா மகாத்மா காந்தி திருவுருவச்சிலை மற்றும் பூங்கா சீரமைக்கக் கோருதல்.

துறையின் பதிலுரை

(5)

ஜெயங்கொண்டம் நகராட்சிக்கு சொந்தமான காந்தி பூங்காவில் உள்ள தேசப்பிதா மகாத்மா காந்தி திருவுருவச்சிலை வர்ணம் பூசப்பட்டு புதுப்பிக்கப்படுவதோடு, மேல் தளத்தில் உள்ள மரங்கள் அப்புறப்படுத்தப்பட்டு பக்கச் சுவரில் விரிசல் பழுதுபார்த்து சரி செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. காந்தி பூங்காவில் மெயின் கேட் பழுதடைந்து இருந்ததை அப்புறப்படுத்தி புதிய கேட் பொருத்தப்பட்டுள்ளது.
மேலும், பூங்கா அபிவிருத்தி திட்டத்தின் கீழ் 5.00 லட்சம் மதிப்பில் காந்தி பூங்காவை மேம்பாடு செய்ய கருத்துரு இயக்குநர், நகர் ஊரமைப்புத் துறை, சென்னை அவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது.
(செயல் அலுவலர், நகராட்சி, ஜெயங்கொண்டம் அவர்களின் ந.க.எண்.அ3/510/2012, நாள்: 22/06/2012)

குழுவின் பரிந்துரை

(6)

மேற்படி பூங்காவில் சமூக விரோத செயல்கள் நடைபெறாத வண்ணம் காவல்துறை கண்காணிக்க வேண்டுமென்றும் இதன் மீதான தொடர் நடவடிக்கை குறித்த அறிக்கை குழுவிற்கு அனுப்பி வைக்கப் பெற வேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் இறுதியறிக்கை

(7)

ஜெயங்கொண்டம் நகராட்சிக்கு சொந்தமான காந்தி பூங்காவில் உள்ள தேசப்பிதா மகாத்மா காந்தி திருவுருவச்சிலை வர்ணம் பூசப்பட்டு புதுப்பித்து, மேல் தளத்தில் உள்ள மரங்கள் அப்புறப்படுத்தப்பட்டு பூங்கா அபிவிருத்தி திட்டத்தின் கீழ் 5.00 லட்சம் மதிப்பில் காந்தி பூங்காவை மேம்பாடு செய்யப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.
(நகராட்சி ஆணையர் (பொ), ஜெயங்கொண்டம், கடித எண்.அ3/510/2012, நாள் 26.07.2019)

குழுவின் குறிப்புரை

(8)

நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படுகிறது.

வரிசை எண் (1)	மனு எண் (2)	மனுதாரரின் பெயரும், முகவரியும் (3)	மனுவின் சுருக்கம் (4)
7	2753	கோ. விஸ்வநாதன், 7ஏ, வெள்ளாளத் தெரு, உடையார்பாளையம், அரியலூர் மாவட்டம்.	உடையார்பாளையம் அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளிக்குக் கட்டட வசதி கோரியது.

துறையின் பதிலுரை (5)	குழுவின் பரிந்துரை (6)
உடையார்பாளையம் அரசு மகளிர் பள்ளிக்கு நபார்டு திட்டம் பகுதி II- கீழ் 11 வகுப்பறைகள் கொண்ட கட்டடம் கட்ட பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்களின் செயல்முறைகள், சென்னை–6, ந.க.எண்.17208/எண்2/எஸ்2/2011, நாள்:03.05.2012 இன்படி அரியலூர் மாவட்டத்திற்கு 377.01 லட்சத்திற்கு திட்ட முன்மொழிவுகள் அரசுக்கு அனுப்பி நபார்டு திட்டம் பகுதி II இன் கீழ் அனுமதி பெற்று அரசு அனுமதி வேண்டி அனுப்பப்பட்டுள்ளது. அனுமதி கிடைக்கப் பெற்றதும், விரைவில் கட்டட பணிகள் துவங்க அனுமதி வழங்கப்படும். இத்திட்டத்தின் மூலம் அப்பள்ளிக்கு போதுமான கட்டட வசதி கிடைக்கும். (முதன்மை கல்வி அலுவலர், அரியலூர், அரியலூர் அவர்களின் கடித ந.க.எண்.3299/ஆ2/2012, நாள்: 25/7/2012)	மனுதாரர் குறிப்பிட்டுள்ள அறையில் வைக்கப்பட்டுள்ள புத்தகங்களை அப்புறப்படுத்தி அந்த அறையை மாணவிகளின் பயன்பாட்டிற்கு வகுப்பறையாக கொடுத்திட வேண்டுமென்றும் இம்மனு மீது எடுக்கப்பட்ட தொடர் நடவடிக்கையை அறிக்கையாக குழுவிற்கு அளித்திட வேண்டுமென்றும் குழு பரிந்துரைக்கிறது.

துறையின் இறுதியறிக்கை	குழுவின் குறிப்புரை
(7)	(8)
2013–2014ஆம் ஆண்டில் நபார்டு திட்டம் 13ன் கீழ் உடையார்பாளையம் அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளிக்கு 11 வகுப்பறைகள், ஆய்வகம் –02, 1000மீட்டர் சுற்றுச்சுவர் ஆகியவை ரூ.1,32,46,000/– மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டு மாணவிகளின் பயன்பாட்டில் உள்ளது. புத்தகங்களை அப்புறப்படுத்தி அந்த அறை மாணவிகளின் பயன்பாட்டில் உள்ளது. (நகராட்சி முதன்மைக்கல்வி அலுவலர், அரியலூர், ந.க.எண்.8553/ஆ2/12.10.2018, நாள் 30.09.2019)	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படுகிறது.

வரிசை எண் (1)	மனு எண் (2)	மனுதாரரின் பெயரும், முகவரியும் (3)	மனுவின் சுருக்கம் (4)
8	2757	திரு என்.எஸ்.சேகர், நாகம்பந்தல், ஆண்டிமடம் ஒன்றியம், அரியலூர் மாவட்டம்.	கருக்கை–நாகம்பந்தல் வழியாக பேருந்து வசதி செய்திடல். 1) ஜெயங்கொண்டம் கருக்கை நாகம்பந்தல் வழியாக திருமுட்டத்– திற்கு நகர பேருந்து வசதி. 2) ரெட்டிப்பாளையம் வழியாக திருமுட்டத்திலிருந்து ஜெயங்– கொண்டத்திற்கு பேருந்து வசதி. 3) கருக்கை நாகம்பந்தல் வழியாக திருமுட்டத்திற்கு அரியலூரில் இருந்து பேருந்து வசதி. 4) ஏற்கெனவே நாகம்பந்தலுக்கு இயங்கிவந்த நகர பேருந்தை மீண்டும் அதே வழித்தடத்தில் இயங்க செய்திட வேண்டுதல்.

துறையின் பதிலுரை

(5)

கருக்கை நாகம்பந்தல் வழியாக திருமுட்டத்திற்கு இயக்கிய பேருந்து தற்போது சாலை சரிசெய்யப்பட்டதால் அதே வழித்தடத்தில் 11.06.2012 முதல் பேருந்து இயக்கப்பட்டு வருகிறது. கருக்கை, நாகம்பந்தல் வழியாக திருமுட்டத்திலிருந்து அரியலூருக்கு புதிய பேருந்து இயக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
(பொது மேலாளர், தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம், திருச்சி, அவர்களின் கடித எண்.தஅபோக/கும்ப/திருச்சி/வ/திவ1/150–2/2012, நாள் 29.7.2012)

துறையின் இறுதியறிக்கை

(7)

1. அரியலூர் – திருமுட்டம் (வழி) கருக்கை சுருக்கை, நாகம்பந்தல் வழித்தடத்தில் நகரப்பேருந்து மூலம் தினசரி 4 நடைகள் 18.11.2012 முதல் இயக்கம் செய்யப்பட்டது. மேலும் கடந்த 27.05.2016 அனைத்து போக்குவரத்து கழகங்களின் (Route Rationalization Committee Meeting) சென்னையில் நடைபெற்ற கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின்படி வருவாய் குறைவாக ஈட்டும் பேருந்து வழித்தடங்களை நிறுத்தம் செய்ய அறிவுறுத்தியதின் அடிப்படையில், மேற்குறிப்பிட்டுள்ள நடைகளில் தினசரி பயணிகளின் கொள்ளளவு மிகவும் குறைந்து காணப்பட்டதால் கடந்த 01.04.2017 முதல் இந்நடைகள் நிறுத்தம் செய்யப்பட்டது. (EPKM-17.0, OR-32.0)

2. கோரிக்கையிலுள்ள திருமுட்டம்–ஜெயங்கொண்டம் (வழி) ரெட்டிப்பாளையம், வல்லம் வழித்தடம் புதிய வழித்தடமாகும். எனவே இவ்வழித்தடத்தில் பேருந்து இயக்க சாத்தியகூறு இல்லை.

குழுவின் பரிந்துரை

(6)

கருக்கை, நாகம்பந்தல் வழியாக திருமுட்டத்திலிருந்து அரியலூருக்கு 20 நாட்களில் புதிய பேருந்து இயக்கப்பட வேண்டுமென்றும் இது தொடர்பான நடவடிக்கை குறித்து குழுவிற்கு அறிக்கை அளித்திட வேண்டுமென்றும் குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் இறுதியறிக்கை	குழுவின் குறிப்புரை
(7)	(8)
3. அரியலூர் – திருமுட்டம் (வழி) கருக்கை, நாகம்பந்தல் வழித்தடத்தில் நகரப்பேருந்து மூலம் தினசரி 4 நடைகள் 18.11.2012 முதல் இயக்கம் செய்யப்பட்டது. மேலும் கடந்த 27.05.2016 அனைத்து போக்குவரத்து கழகங்களின் (Route Rationalization Committee Meeting) சென்னையில் நடைபெற்ற கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின்படி வருவாய் குறைவாக ஈட்டும் பேருந்து வழித்தடங்களை நிறுத்தம் செய்ய அறிவுறுத்தியதின் அடிப்படையில், மேற்குறிப்பிட்டுள்ள நடைகளில் தினசரி பயணிகளின் கொள்ளளவு மிகவும் குறைந்து காணப்பட்டதால் கடந்த 15.07.2017 முதல் இந்நடைகள் நிறுத்தம் செய்யப்பட்டது. (EPKM-14.29, OR-27.74)	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படுகிறது.
4. அரியலூர் – திருமுட்டம் (வழி) கருக்கை கருக்கை, நாகம்பந்தல் வழித்தடத்தில் நகரப்பேருந்து மூலம் தினசரி 4 நடைகள் 18.11.2012 முதல் இயக்கம் செய்யப்பட்டது. மேலும் கடந்த 27.05.2016 அனைத்து போக்குவரத்து கழகங்களின் (Route Rationalization Committee Meeting) சென்னையில் நடைபெற்ற கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின்படி வருவாய் குறைவாக ஈட்டும் பேருந்து வழித்தடங்களை நிறுத்தம் செய்ய அறிவுறுத்தியதின் அடிப்படையில், மேற்குறிப்பிட்டுள்ள நடைகளில் தினசரி பயணிகளின் கொள்ளளவு மிகவும் குறைந்து காணப்பட்டதால் கடந்த 01.04.2017 முதல் இந்நடைகள் நிறுத்தம் செய்யப்பட்டது. (EPKM-17.0, OR-32.0) என்பதை அன்புடன் தெரிவித்துக் கொள்கிறோம். (தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம்) பொது மேலாளர், திருச்சி, கடித எண். தஅபோக/கும்ப/திருச்சி/வ/திவ1/11–4/2014, நாள் 01.08.2019)	

வரிசை எண் (1)	மனு எண் (2)	மனுதாரரின் பெயரும், முகவரியும் (3)	மனுவின் சுருக்கம் (4)
9	2758	திரு. ஆ. பிச்சைப்பிள்ளை, நல்லான்காலனி, பெரியாக்குறிச்சி, செந்துறை வட்டம், அரியலூர் மாவட்டம்.	அரியலூர் – விருத்தாசலம் வழியில் 188ஆம் நம்பர் கேட்டிற்கு கீழ்புறம் பெரிய குழாயைப் பதித்து தண்ணீர் செல்லும் வாய்க்காலையும் அகலமாக வெட்டி தண்ணீர் தேங்காமல் இருக்க போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுக்க வேண்டுதல்.

துறையின் பதிலுரை

(5)

அரியலூர் மாவட்டம், செந்துறை வட்டம், செந்துறை – மாத்தூர் இரயில் நிலையங்களுக்கு இடையில் இயங்கி வந்த பெரியாக்குறிச்சி மற்றும் இலைக்கடம்பூர் கிராமத்தின் அருகில் கேட் எண்.188 மற்றும் நக்கம்பாடி கிராம ரயில்வே லெவல் கிராசிங் கேட் எண்.189–க்கு பதிலாக சுரங்கப்பாதை அமைக்கப்பட்டு ரயில் லெவல் கிராசிங் கேட் 188 மற்றும் 189–களை மூடுவதற்கு ரயில்வே துறையினரால் கோரப்பட்டபொழுது சுரங்கப்பாதைகளை அமைத்தால் மழைக்காலங்களில் பொது மக்கள் பெரிதும் பாதிக்கப்படுவதால் மேற்படி கேட்டுகளை மூடிவிடக்கூடாது எனவும், மழைக்காலங்களில் தேங்கும் நீர் வெளியேறுவதற்கு உரிய வடிகால் வசதி ரயில்வே துறையினரால் செய்து கொடுக்க திருச்சி முதுநிலை கோட்டப்பொறியாளர் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார்.
(மாவட்ட ஆட்சித் தலைவர், அரியலூர் அவர்களின் கடித எண்.ந.க.இ1/8026/2011, நாள்: 27.9.2011)

(6)

இம்மனுவின் மீதான தொடர் நடவடிக்கை குறித்து குழுவிற்கு அறிக்கை அனுப்ப வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் இறுதியறிக்கை	குழுவின் குறிப்புரை
(7)	(8)
திருச்சிராப்பள்ளி, தென்னக ரயில்வே, கூடுதல் பொது மேலாளர் அவர்களுக்கு, அரசு மூலமாக ரயில்வே கேட் லெவல் கிராசிங் எண்.188 மற்றும் எண்.189 அருகில் உள்ள சுரங்கப்பாதை வழியினை சீர்படுத்தி, மழைக்காலங்களில் மழை நீர் தேங்காமல் வடிகால் வசதியினை செய்து தர அறிவுறுத்தப்பட்டுள்ளது. இவ்வலுவலக கடிதத்தின் வாயிலாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (நகல் இணைக்கப்பட்டுள்ளது)	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படுகிறது.

(மாவட்ட வருவாய் அலுவலர், அரியலூர், ந.க.எண்.4981/2018/சி1, நாள் 01.08.2019)

வரிசை எண் (1)	மனு எண் (2)	மனுதாரரின் பெயரும், முகவரியும் (3)	மனுவின் சுருக்கம் (4)
10	2759	திரு. ம. இராவணன், அசாவீரன்குடிக்காடு, செந்துறை வட்டம், அரியலூர் மாவட்டம்.	அரியலூர் – ஆர்.எஸ்.மாத்தூர் (வழி) கல்லங்குறிச்சி புதிய பேருந்து இயக்கக் கோருதல்

TRUTH ALONE TRIUMPHS

துறையின் பதிலுரை

(5)

கோரிக்கை வழித்தடமான அரியலூர்–ஆர்.மாத்தூர் (வழி) கல்லங்குறிச்சி, உஞ்ஜினி ஆனந்தவாடி, சோழங்குறிச்சி, செந்துறை வழித்தடத்தில் புதிய பேருந்துகள் இயக்கப்படும்போது முன்னுரிமை அடிப்படையில் பேருந்து இயக்கப்படும். மேலும் தற்போது அரியலூர் – ஆர்.எஸ்.மாத்தூர் வழித்தடத்தில் இயங்கிவரும் நகர் மற்றும் பறநகர் பேருந்துகளில் உள்ள போதிய கால இடைவெளி குறைபாடு மேற்படி, புதிய வழித்தட பேருந்து இயக்கப்படும் போது சரி செய்யப்படும். மேலும், அரியலூர் ஆர்.எஸ். மாத்தூர் வழித்தடத்தில் நேரிடையாக பேருந்து வசதி உள்ளது.

(பொது மேலாளர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், திருச்சி அவர்களின் கடித எண்.தஅபோக/கும்ப/திருச்சி/வ/திவ1/150–2/2012, நாள் 29.7.2012)

குழுவின் பரிந்துரை

(6)

இம்மனுவின் மீதான தொடர் நடவடிக்கை குறித்து குழுவிற்கு அறிக்கை அனுப்ப வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் இறுதியறிக்கை

(7)

அரியலூர் –ஆர்.எஸ். மாத்தூர் (வழி) கல்லங்குறிச்சி, ஆனந்தவாடி, சோழங்குறிச்சி, உஞ்ஜினி, செந்துறை புதிய வழித்தடமாகும். தடத்தில் ஒரு அரசு பேருந்து மூலம் தினசரி 6 நடைகள் 18.11.2012 முதல் இயக்கப்பட்டது. ஆனால் இப்பேருந்தின் பயணிகளின் கொள்ளளவு பயன்பாடு 27.0% EPKM - 13.50 என மிகவும் குறைந்து காணப்பட்டதால் 07.11.2013 முதல் நிறுத்தம் செய்யப்பட்டது என்பதை அன்புடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

(தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம்) பொது மேலாளர், திருச்சி, தஅபோக/கும்ப/திருச்சி/வ/திவ1/11–5/2014, நாள் 01.08.2019)

குழுவின் குறிப்புரை

(8)

நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படுகிறது.

வரிசை எண் (1)	மனு எண் (2)	மனுதாரரின் பெயரும், முகவரியும் (3)	மனுவின் சுருக்கம் (4)
11	4722	திருமதி பங்கஜம், க/பெ. தட்சிணாமூர்த்தி, ஊராட்சி மன்றத்தலைவர், வாரணவாசி, திருமானூர் ஊராட்சி ஒன்றியம், அரியலூர் வட்டம்.	வாரணவாசி – மல்லூர் 2.00 கி.மீ சாலையில் தரைப்பாலத்தை மேம்பாலமாக கட்டித்தரக் கோருதல்.

துறையின் பதிலுரை (5)	குழுவின் பரிந்துரை (6)
வாரணவாசி–மல்லூர் சாலை 2.00 கி.மீ ஆகும். இந்த சாலைப் பணி மற்றும் மேற்படி தரைப்பாலத்தை மேம்பாலமாக கட்டுவது உட்பட ரூ.87.26 லட்சத்தில் PMGSY-VIII திட்டத்தில் செயல்படுத்த கருத்துரு திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, அரியலூர் அவர்களின் கடிதம், ந.க.அ3/3535/2012, நாள் 22.08.2012இல் சென்னை ஊரக வளர்ச்சி துறை ஆணையர் அவர்களுக்கு கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது. இப்பணி அனுமதிக்கப்பட்டதும் மேற்படி பாலம் கட்டித்தரப்படும். (வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ) திருமானூர் அவர்களின் கடித ந.க.எண்.அ2/2646/2012, நாள் 27.08.2012)	மேம்பாலம் கட்டும்பணி குறித்து எடுத்த தொடர் நடவடிக்கையை அறிக்கையாக குழுவிற்கு அளிக்கப்பெற வேண்டுமெனக் குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் இறுதியறிக்கை	குழுவின் குறிப்புரை
(7)	(8)
வாரணவாசி – மல்லூர் சாலை 2.00 கி.மீ. ஆகும். இந்த சாலைப் பணி மற்றும் மேற்படி தரைப்பாலத்தை மேம்பாலமாக கட்டுவது உட்பட ரூ.77.20 லட்சத்தில் PMGSY-VIII திட்டத்தில் பணி முடிவுற்றது. நிர்வாக அனுமதி எண் 116CGS-2/2013 நாள் 19/03/2013 (வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ), திருமானூர் ந.க.எண்.அ2/2833/18, நாள் 31.07.2019)	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படுகிறது.

வரிசை எண் (1)	மனு எண் (2)	மனுதாரரின் பெயரும், முகவரியும் (3)	மனுவின் கருக்கம் (4)
12	4725	திரு. கே. அரிச்சந்திரன், ஊராட்சிமன்றத் தலைவர், கீழப்பழூர் திருமானூர் ஊராட்சி ஒன்றியம், அரியலூர் வட்டம்.	கீழப்பழூர் செங்குளம், கருங்குளம் ஏரிகளை தூர்வாரக் கோருதல்.

தமிழ்நாடு LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

துறையின் பதிலுரை	குழுவின் பரிந்துரை
(5)	(6)
திருமானூர் ஊராட்சி ஒன்றியம், கீழப்பழூர் ஊராட்சியில் கீழ்க்கண்ட குளங்கள் கீழ்க்கண்ட மதிப்பீட்டில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டத்தில் (MGNREGS) 2012-13ஆம் ஆண்டில் ஆழப்படுத்த மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறைகள் ந.க.அ6/1792/2012, நாள்.3.5.2012–இல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. நடப்பு நிதியாண்டில் இப்பணி செயல்படுத்தப்படும். 1) கருங்குளம் ரூ.8.40 இலட்சம் 2) செங்குளம் ரூ.12.38 இலட்சம் வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.உ) திருமானூர், அவர்களின் கடித ந.க.எண்.அ2/2640/2012, நாள்: 22.08.2012)	நடப்பு நிதியாண்டிற்குள் தூர்வாரும் பணிகளை முடித்து குழுவிற்கு அறிக்கை அளிக்கப்பெற வேண்டுமென குழு பரிந்துரைக்கிறது.
துறையின் இறுதியறிக்கை	குழுவின் குறிப்புரை
(7)	(8)
2012–13ஆம் ஆண்டு முதல் 2017–18ஆம் ஆண்டு வரை தொடர்ந்து மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் நிர்வாக அனுமதி பெற்று கருங்குளம், செங்குளம் ஆழப்படுத்துட பணி செய்து முடிக்கப்பட்டுள்ளது. (வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.உ), திருமானூர், ந.க.எண்.அ2/2833/18, நாள் 31.07.2019)	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படுகிறது.

வரிசை எண் (1)	மனு எண் (2)	மனுதாரரின் பெயரும், முகவரியும் (3)	மனுவின் சுருக்கம் (4)	துறையின் பதிலுரை (5)	குழுவின் பரிந்துரை (6)
13	4726	திரு. கருப்பையன், ஊராட்சி மன்றத் தலைவர், அயன்சுத்தமல்லி, திருமானூர் ஊராட்சி ஒன்றியம், அரியலூர் வட்டம்.	புத்தூர் – அயன்சுத்தமல்லி இடையில் இணைப்புப் பாலம் அமைத்தல்.	கல்லகம் –திருமழபாடி சாலை முதல் அயன்சுத்தமல்லி வரை உள்ள சாலை PMGSY-VII திட்டத்தில் ரூ.30.76 லட்சத்தில் மேலே கண்டுள்ள மேற்படி இணைப்புப் பாலம் (புத்தூர்–அயன்சுத்தமல்லி) இடையில் இணைப்புப் பாலம்) உட்பட செயல்படுத்தத் திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, அரியலூர் அவர்களின் கடிதம் ந.க.அ3/3535/2012, நாள் 22.08.2012இல் சென்னை ஊரக வளர்ச்சி துறை ஆணையர் அவர்களுக்கு கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது. மேற்படி திட்டம் செயல்படுத்தப்படும்போது இணைப்புப் பாலம் கட்டித்தரப்படும். (வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.உ) திருமானூர் அவர்களின் கடித எண்.ந.க.எண்.அ2/2640/2012, நாள் 27.08.2012)	இணைப்புப் பாலம் அமைக்கும் பணி மீதான தொடர் நடவடிக்கை குறித்து குழுவிற்கு அறிக்கை அனுப்பிவைக்க வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் இறுதியறிக்கை	குழுவின் குறிப்புரை
(7)	(8)
கல்லகம்–திருமழபாடி சாலை முதல் அயன்சுத்தமல்லி வரை உள்ள சாலை (புத்தூர்–அயன்சுத்தமல்லி இடையில் இணைப்புப் பாலம்) PMGSY-IX திட்டத்தில் ரூ. 53.85 இலட்சத்தில் பணி செய்து முடிக்கப்பட்டது. நிர்வாக அனுமதி எண் A3/312/2013 நாள் 19.02.2015 (வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ). திருமானூர் – ந.க.எண்.அ2/2833/18, நாள் 31.07.2019)	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படுகிறது.

கி. சீனிவாசன்,
செயலாளர்.


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS